Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

FRIDAY, JANUARY 13, 2023

வெள்ளிக்கிழமை ஜனவரி 13, 2023 | ஒளி: 08 கதிர்: 186 | பக்கம்:09 | நகரப்பதிப்பு★ | FREE

இந்தியா, பாகிஸ்தானில் இருந்து

## முட்டை இறக்குமதி செய்ய முடியாது



அண்மைய காலத்தில் இரண்டு நாடுகளிலும் பறவைக் காய்ச்சல் பரவிய காரணத்தால், இந்தியா அல்லது பாகிஸ்தானில் இருந்து முட்டைகளை இறக்குமதி செய்ய முடியாது என்று கால்நடை

தொடர்ச்சி P2

எழுத்துமூல உறுதிமொழியை அடுத்து

## சாகும் வரையான உண்ணாவிரத போராட்டம் கைவிடப்பட்டது









தமிழ் தேசிய பரப்பில் பயணிக்கும் அனைத்து கட்சிகளையும் அமைப்புகளையும் தனிநபர்களையும் ஓரணியில் திரள வலியுறுத்தி, முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பில் முன்னாள் போராளியான வேலுப்பிள்ளை மாதவமேஜர் கடந்த நான்கு நாள்களாக முன்னெடுத்து வந்த சாகும் வரையான உண்ணாவிரத போராட்டம், அரசியல் கட்சி தலைவர்களின் எழுத்துமூல உறுதிமொழியை அடுத்து நேற்று (12) கைவிடப்பட்டுள்ளது.

கடந்த ஒன்பதாம் திகதி (09) காலை முதல் இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு இடம்பெற்று வந்த நிலையில், நேற்று (12) நூற்றுக்கணக்கான மக்கள் போராட்டம் இடம்பெறும் இடத்தில் ஒன்றுகூடியிருந்ததோடு தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் தலைவர்கள் சிலரும் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டு ஆதரவை வெளிப்படுத்தியிருந்தனர். புதுக்குடியிருப்பு சந்தியில், இலங்கை வங்கி கட்டடத்திற்கு அண்மையில் மேற்படி உண்ணாவிரத போராட்டத்தை முன்னாள் போராளியும் மூன்று மாவீரர்களின் சகோதரனும் நாட்டுப்பற்றாளர் ஒருவரின் மகனுமான வேலுப்பிள்ளை மாதவமேஜர் நீராகாரம் எதுவுமின்றி சாகும் வரையான உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பித்து முன்னெடுத்து வந்தார்.

தொடர்ச்சி P2

ஈஸ்டர் தின தாக்குதலை தடுக்கத் தவறிய

## மைத்திரி உள்ளிட்ட ஐவரும் குற்றவாளிகள்



**அடிப்படை உரிமைகளை மீறியதாக உயர்நீதிமன்றம் தீர்ப்பு**

**ரூ.310 மில்லியன் நட்டஈடு செலுத்துமாறு ஐவருக்கும் உத்தரவு**

**பாதிக்கப்பட்டோர் நிதியத்தை உருவாக்குமாறு கட்டளை**



2019 ஆம் ஆண்டு ஈஸ்டர் தினத்தன்று தற்கொலை தாக்குதல் நடத்தவுள்ளதாக புலனாய்வு தகவல்கள் கிடைத்திருந்தும் அதனை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கத் தவறிய பிரதிவாதிகளால் மனுதாரர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகவும் அவர்களை குற்றவாளிகளாக இனங்கண்டுள்ளதாகவும் உயர்நீதிமன்றம், வியாழக்கிழமை (12) தீர்ப்பளித்தது.

பிரதிவாதிகளான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர, தேசிய புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவர் சிசிர மெண்டிஸ் மற்றும் முன்னாள்

தொடர்ச்சி P2

ஆஷு மீது பாலியல் குற்றச்சாட்டு

## கைதான ஆதர்ஷா பிணையில் விடுவிப்பு



ஜனாதிபதியின் முன்னாள் ஆலோசகரும் பேராசிரியருமான ஆஷூ மாரசிங்கவால் தனது நாய் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதாக குற்றம் சுமத்திய ஆதர்ஷா கரதனாவை 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் பிரசன்ன அல்விஸ், வியாழக்கிழமை (12) உத்தரவிட்டார்.

தொடர்ச்சி P2

இலங்கையின் கடன்களை மறுசீரமைக்க

## சீனாவும் இந்தியாவும் உடன்பட வேண்டும்



இலங்கையின் கடன் மறுசீரமைப்பிற்கு ஒத்துழைப்பு வழங்கி, பில்லியன் கணக்கான டொலர் கடனை குறைக்க சீனாவும் இந்தியாவும் ஒப்புக் கொள்ளும் வரை சர்வதேச நாணய நிதியம் பணத்தை வழங்காது. எனவே அனைத்துத் தரப்பினரும் விரைவாகச் செயற்படுவது சிறந்தது என மத்திய வங்கியின்

தொடர்ச்சி P2

ஜனாதிபதி ரணில்

## அடக்குமுறை மூலம் பதிலளித்துள்ளார்



இலங்கையில் ஜனாதிபதி மாற்றமானது, நாட்டின் மனித உரிமை நிலைமைகளில் எந்தவிதமான முன்னேற்றத்திற்கு காரணமாக அமையவில்லை என மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. இந்த நிலையில் மறுசீரமைப்பு மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பான கோரிக்கைகளுக்கு

தொடர்ச்சி P2

உள்ளூராட்சி தேர்தலுக்குப் பின்னர்

## புதிய சுற்றாடல் விதிமுறை நடைமுறைப்படுத்தப்படும்



உள்ளூராட்சி தேர்தலுக்குப் பின்னர் சூழல் நேய புதிய சுற்றாடல் விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கு முழுமையான ஆதரவு வழங்கப்படும் என்று பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார். பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று (12) நடைபெற்ற வேர்ல்ட் விஷன் கழிவு முகாமைத்துவ மாநாட்டில்

தொடர்ச்சி P2



இக்கட்டான தருணத்தில்

## நாமே இலங்கையின் நிரந்தர நண்பன்

இலங்கை எதிர்கொள்ளும் இக்கட்டான தருணத்தில் சீனா எப்போதும் இலங்கையுடன் நிரந்தர நண்பனாக இருப்பதாக சீனாவின் பதில் தூதுவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

100 ஆவது சுதந்திர தினம் வரை

## மாறாத அரச கொள்கை

**தேசிய சுதந்திர தின விழாவில் அறிமுகம்**




'நமோ நமோ மாதா - நூற்றாண்டுக்கு ஒரு படி' என்ற தொனிப்பொருளில் நடைபெறும் தேசிய சுதந்திர தின விழாவில், 2048 ஆம் ஆண்டு 100 ஆவது சுதந்திர தினம் வரை மாறாத அரச கொள்கையை அமல்படுத்தும் வகையில், அடுத்த 25 ஆண்டுகளுக்கு

தொடர்ச்சி P2

## சரியான பாதையில் பயணிக்கின்றோம்



இந்நாட்டின் வர்த்தக சமூகத்தை பாதுகாக்கும் வகையில் கடனை திருப்பிச் செலுத்துவதை ஒத்திவைப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய்வதன் மூலம், வர்த்தகர்களுக்கு அவசியமான சலுகைகளைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கைகளை

தொடர்ச்சி P2

ஆணைக்குழுவை தொடர்ந்து

## புறக்கணித்தால் மனுத்தாக்கல்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவை, கல்வி அமைச்சின் செயலாளர் தொடர்ந்தும் புறக்கணிக்கும் பட்சத்தில் அது தொடர்பில் உயர்நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்ய எதிர்பார்த்துள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்தது.

தொடர்ச்சி P2

## நிர்மலா, ஜெய்சங்கரை சந்தித்தார் செந்தில்





இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் ஆகியோரை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இந்தச் சந்திப்பில் இலங்கையின் பொருளாதார விவகாரங்கள் குறித்து கலந்துரையாடியுள்ளார்.

தொடர்ச்சி P2

## 2023 முதல் வாரத்தில் 20 ஆயிரம் பேர் வருகை

2023ஆம் ஆண்டின் முதல் வாரத்தில் 20,875 சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர் என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையால் வெளியிடப்பட்ட தரவுகள் தெரிவிக்கின்றன.

பெரும்பாலான சுற்றுலாப் பயணிகள் ரஷ்யா, இந்தியா, ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி ஆகிய நாடுகளில் இருந்து

தொடர்ச்சி P2



## களனிதிஸ்ஸ இன்று செயலிழக்கலாம்

களனிதிஸ்ஸ அனல்மின் நிலையத்தை இயக்குவதற்கு தேவையான நப்தா இன்மையால் இன்றைதினம் (13) காலை முதல் மின்நிலையம் செயலிழலாம் என்று இலங்கை மின்சார சபையின் தலைவர் நலிந்த இலங்ககோன், வியாழக்கிழமை (12) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# மைத்திரி உள்ளிட்ட ஐவரும் குற்றவாளிகள்

அரச புலனாய்வுப் பிரிவின் தலைவர் நிலந்த ஜயவர்தன ஆகியோரே மனுதாரர்களின் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளனர் என தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

தனது இரண்டு பிள்ளைகளை ஈஸ்டர் குண்டுத் தாக்குதலில் பறிகொடுத்த தந்தையான நந்தன சிறிமான்ன, மூன்று கத்தோலிக்க அருட்தந்தையர்கள் உள்ளிட்ட சிலரால் 12 அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்களான புவனேக அலுவிஹாரே, எல்.டி.பி. தெஹிதெனிய, முர்து பெர்னாண்டோ, எஸ். துரைராஜா, ஏ.எச்.எம்.டி நவாஸ், ஷிரான் குணரத்ன ஆகிய எழுவர் அடங்கிய குழாம் மேற்குறிப்பிட்ட தீர்ப்பை வழங்கியது.

சஹ்ரான் மற்றும் அவரது சகாக்கள் பற்றிய தகவல்களைத் தெரிந்துகொள்ளும் கடமையில் முன்னாள் ஜனாதிபதியும் பாதுகாப்பு அமைச்சருமான மைத்திரி தவறிவிட்டார் என்றும் தீர்ப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அரசியலமைப்பு மற்றும் ஏனைய சட்டங்களின் கீழ் வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு மற்றும் உத்தரவாதங்களை வழங்குவதில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரி மெத்தனமாக இருந்ததாகவும் பாதுகாக்க வேண்டிய கடமையை அவர் மீறியுள்ளார் என்றும் உயர் நீதிமன்றம் முடிவுக்கு வந்ததாக தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், முன்னாள் ஜனாதிபதி மைத்திரி 100 மில்லியன் ரூபாயையும் பூஜித் ஜயசுந்தர மற்றும் நிலந்த ஜயவர்தன ஆகியோர் தலா 75 மில்லியன் ரூபாயையும் ஹேமசிறி பெர்னாண்டோ 50 மில்லியன் ரூபாயையும் சிசிர மெண்டிஸ் 10 மில்லியன் ரூபாவை தமது சொந்த நிதியில் இருந்து நட்டஈடாக செலுத்த வேண்டுமெனவும் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

மேற்குறிப்பிட்ட நட்டஈட்டு நிதியைக் கொண்டு 2019 ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் அதற்காக பாதிக்கப்பட்டோர் நிதியம் உருவாக்கப்பட வேண்டும் என்றும் உத்தரவிப்பட்டது.

உயிரிழந்தவர்களுக்கு 10 இலட்சம் ரூபாயும் காயமடைந்தவர்களுக்கு 5 இலட்சம் ரூபாயும் நட்டஈடாக அரசாங்கம் வழங்கவேண்டும் என்றும் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவர் நிலந்த ஜயவர்தனவுக்கு எதிராக 6 மாதங்களுக்குள் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கான முன்னேற்றம் மற்றும் முன்னாள் அரச புலனாய்வுப் பிரிவின் தலைவர் நிலந்த ஜயவர்தனவுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அவதானித்து நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு சட்டமா அதிபருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

## புறக்கணித்தால் மனுத் தாக்கல்

பாடசாலைகளுக்கு மாணவர்கள் இணைத்துக்கொள்ளப்படும் முறை தொடர்பில் 300 முறைப்பாடுகளுக்கு மேல் கிடைத்துள்ள நிலையில், அதுகுறித்து ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இந்த விடயங்கள் குறித்து விசாரிப்பதற்காக கல்வி அமைச்சின் செயலாளரை பலமுறை ஆணைக்குழுவுக்கு அழைத்த போதும் அவர் ஆஜராகவில்லை எனவும் இவ்வாறு தொடர்ந்து புறக்கணித்தால் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யவுள்ளதாக ஆணைக்குழு அறிவித்துள்ளது.

முதலாம் தரம் மற்றும் ஆறாம் தரத்துக்கு மேற்பட்ட வகுப்புகளில் மாணவர்களை அனுமதிப்பதில் பல்வேறு முறைகேடுகள் இடம்பெறுவதாக முறைப்பாடுகள் பதிவுசெய்யப்படுகின்றன.

பல்வேறு சுற்றறிக்கைகள் வெளியான போதும் ஆறாம் தரம் மற்றும் அதற்கு மேற்பட்ட வகுப்புகளுக்காக மாணவர்களை அனுமதிப்பது குறித்து கல்வி அமைச்சு ஏற்றுக் கொள்ளக்கூடிய மட்டத்திலான திட்ட வரைபுகளை இதுவரை தயாரிக்கவில்லை.

இந்த விடயம் ஆணைக்குழு மேற்கொண்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளதுடன், சில முக்கிய பாடசாலைகளில் உதவித்தொகை பெற்றும் பணம் பெற்றுக்கொண்டு மாணவர்களை அனுமதிப்பதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

ஆறாம் தரத்துக்கு மேலுள்ள தரங்களில் மாணவர்களை சேர்ப்பதால் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த திறமையான மாணவர்களுக்கான வாய்ப்புகள் அற்றுப்போனதும் விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளதாக ஆணைக்குழு தகவல்கள் தெரிவிக்கின்றன.

## நிர்மலா, ஜெய்சங்கரை சந்தித்தார் செந்தில்

இலங்கை கடுமையான பொருளாதார நெருக்கடியை சந்தித்திருந்த தருணத்தில் இந்தியா வழங்கிய உதவிகளுக்கு இதன்போது செந்தில் தொண்டமான் நன்றிகளை தெரிவித்தார்.

எதிர்கால த்தில் ஏற்படப்போகும் பொருளாதார சவால்கள் மற்றும் அதனை எதிர்கொள்வது குறித்தும், தொடர்ந்தும் இந்தியா இலங்கைக்கு உதவிகளை வழங்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார். மேலும் மலையக மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்தும் கலந்துரையாடபட்டது.

இலங்கைக்கு இந்தியா அனைத்து சந்தர்ப்பங்களிலும் தனது முழுமையான உதவிகளை வழங்கும் எனவும் இந்தியா பங்களாதேஷிற்கு வழங்கிய முழுமையான உதவியால் இன்று பங்களாதேஷ் முன்னேற்றம் அடைந்து வருவது போல் இலங்கையும் முன்னேற்றமடைய வேண்டும் என இந்திய நிதி அமைச்சர் தெரிவித்தார்.

மேலும் மறைந்த தலைவர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களின் வரலாறு புத்தகத்தை இ.தொ.கா சார்பில் செந்தில் தொண்டமான் இந்திய நிதி மற்றும் வெளிவிவகாரா அமைச்சர்களுக்கு வழங்கி வைத்தார்.

## புதிய சுற்றாடல் விதிமுறை நடைமுறைப்படுத்தப்படும்

கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இதனை தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடத்தப்பட்ட பின்னர், உள்ளூராட்சி அமைப்புகளுக்கான சூழலுக்கும், மக்களுக்கும் உகந்த புதிய விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கு உங்களுடன் இணைந்து பணியாற்ற முழுமையான ஒத்துழைப்பை வழங்குவேன். சிறந்த எதிர்காலத்தை எதிர்பார்க்கும் உள்ளூராட்சி அமைப்புகளுக்குத் தேவையான கல்வி மற்றும் புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி புதிய முறைகளின்படி செயற்பட வழிசெய்யப்படும். அதற்கு அரசு சார்பிலும், உள்ளூராட்சி துறைக்கு பொறுப்பான அமைச்சர் என்ற வகையிலும் உறுதியளிக்கிறேன். ஆனால் இப்போது தேர்தல் நெருங்கிவிட்டதால் இதைச் சொல்ல முடியுமா என்று தெரியவில்லை. ஆனால் நல்ல எதிர்காலத்திற்காக இதைச் சொல்ல வேண்டியது அவசியம். தூய்மையான நாடு, வருமானம் ஈட்டுவதற்கான வழி என்பதை இந்த திட்டத்தின் முக்கிய கருப்பொருளாக வேர்ல்ட் விஷன் நிறுவனம் எடுத்துள்ளது என்றார்.

## கைதான ஆதர்ஷா பிணையில் விடுவிப்பு

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரவுடன் இணைந்து ஆஷு மாரசிங்கவுக்கு எதிராக டிசம்பர் 23ஆம் திகதியன்று ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்திய ஆதர்ஷா, தனது செல்லப் பிராணியான நாயை ஆஷூ மாரசிங்க பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்ததாகக் கூறப்படும் காணொளியை வெளியிட்டார். இதனைத் தொடர்ந்து அந்த குற்றச்சாட்டை மறுத்த மாரசிங்க தன்னை களங்கப்பட்டுத்த முயல்தாகவும் அந்த காணொளி சித்தரிக்கப்பட்ட ஒன்று எனவும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் டிசெம்பர் 24ஆம் திகதி முறைப்பாடு பதிவு செய்தார்.

பின்னர், மாரசிங்கவின் முறைப்பாட்டுக்கு அமைய தன்னை சீ.ஐ.டியினர் கைது செய்யப்படக்கூடும் என்பதால், அதற்கு முன்பிணை வழங்குமாறு ஆதர்ஷா மனுத்தாக்கல் செய்திருந்தார்.

மாரசிங்கவுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பிலான விசாரணைகளுக்கு இடையூறாக அமையும் என்ற காரணத்தால் முன்பிணை மனுவை நிராகரிப்பதாக பிரதான நீதவான் பிரசன்ன அல்விஸ், செவ்வாய்க்கிழமை (10) அறிவித்தார். இந்நிலையில், முறைப்பாடு குறித்து விசாரித்த சீ.ஐ.டியின் கணினிக் குற்றப் பிரிவினர் ஆதர்ஷாவை புதன்கிழமை (11) கைது செய்து வியாழக்கிழமை (12) நீதிமன்றில் ஆஜர்படுத்திய போதே அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

## சரியான பாதையில் பயணிக்கின்றோம்

தான் மத்திய வங்கி ஆளுநருக்கு அறிவித்துள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார். மகளிர் கைத்தொழில் மற்றும் வர்த்தக சம்மேளனத்தின் பெண் தொழில் முனைவோரை கௌரவப்படுத்தும் வகையில் நேற்று முன்தினம் (11) மாலை கிங்ஸ்பரி ஹோட்டலில் நடைபெற்ற “பிரதிபா அபிஷேக 2022” நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாடு என்ற வகையில் மிகவும் நெருக்கடியான சூழலை நாம் எதிர்கொண்டுள்ள போதும் அந்த சவால்களை முறியடித்து நாட்டின் பொருளாதாரத்தை சரியான பாதையில் கொண்டு செல்வதற்கான சந்தர்ப்பம் எமக்கு இவ்வருடத்தில் கிடைத்திருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கடன் மறுசீரமைப்பு தொடர்பான கலந்துரையாடல்கள் வெற்றிகரமாக முன்னேற்றம் கண்டுள்ளதாக தெரிவித்த ஜனாதிபதி, எதிர்காலத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அதற்கு மேலதிகமாக உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பவற்றிடமிருந்து கடனுதவி கிடைக்கும் எனவும் குறிப்பிட்டார். இதேவேளை, இலாப நோக்கற்ற அரச நிறுவனங்களை மறுசீரமைப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாகவும், நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையைக் கட்டியெழுப்புவதற்காகவே இந்நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

## மாறாத அரச கொள்கை

அரசாங்கத்தின் புதிய சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டம் அறிவிக்கப்பட உள்ளது. தேசிய சுதந்திர தினக்கொண்டாட்டத்தின் பிரதான நிகழ்வு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 04ஆம் திகதி காலை 8.30 மணிக்கு காலி முகத்திடலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோரின் தலைமையில் நடைபெறவுள்ளது. சுதந்திர சதுக்கத்தில் அமைந்துள்ள தேசபிதா டி.எஸ். சேனாநாயக்கவின் உருவச்சிலைக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்திய பின்னர் ஜனாதிபதி செயலக வளாகத்தில் உள்ள தேசிய மாவீரர்களின் உருவச்சிலைகளுக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டதன் பின்னர் வைபவம் ஆரம்பமாகவுள்ளது.

யாழ் கலாசார நிலையம், பெப்ரவரி 11ஆம் திகதி காலை ஜனாதிபதி தலைமையில் திறந்து வைக்கப்படவுள்ளதுடன், யாழ் கலாசார நிலையத்திற்கு முன்பாக ஆரம்பிக்கும் கலாசார ஊர்வலம் யாழ். நகரின் ஊடாக வீதி உலா வந்து யாழ்ப்பாணம் கோட்டைக்கு அருகில் நிறைவடையும். (பழைய பேருந்து நிலையம்) அங்கு கலாசார நிகழ்வுகள் நடைபெறவுள்ளதுடன், அன்று இரவு அதே இடத்தில் சிறப்பு இசை நிகழ்ச்சியும் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

சுதந்திரம் தொடர்பான 30 நிமிட குறும்படமொன்றை தயாரித்து அனைத்து திரையரங்குகளிலும் கலையரங்குகளிலும் காண்பிக்க திட்டமிடப்பட்டுள்ளதுடன், இளைஞர் சமுதாயத்தை இலக்கு வைத்து "சுதந்திரம்" என்ற தலைப்பில் குறும்படங்கள், தேசபக்தி பாடல்கள் மற்றும் ஓவியப் போட்டிகள் உள்ளிட்ட வடிவமைப்புப் போட்டியொன்றை மே மாதம் நடத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

## சீனாவும் இந்தியாவும் உடன்படவேண்டும்

ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார். எனவே சீனாவும் இந்தியாவும் தங்களின் கடன்களை மறுசீரமைக்க உடன்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார். அனைத்துத் தரப்பினரின் நலன் கருதி சீனாவும் இந்தியாவும் உடனடியாக உரிய நடவடிக்கை எடுப்பது அனைவருக்கும் நல்லது எனக் குறிப்பிட்டுள்ள அவர், அந்த நாடுகளின் கடன்களை இலங்கை திருப்பிச் செலுத்த உதவும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். கடமைகளை நிறைவேற்றாமல், நீண்ட காலத்திற்கு இவ்வாறான நிலையில் இருக்க இலங்கையும் விரும்பவில்லை. அது நாட்டுக்கும் மக்களுக்கு நல்லதல்ல எனவும் குறிப்பிட்டுள்ளார். சர்வதேச நாணய நிதியத்துடனான ஒரு ஒப்பந்தம் ஜனவரி மாதத்தின் பிற்பகுதியில் வரலாம், ஆனால் இது அனைத்தும் மற்ற தரப்பினரைப் பொறுத்தது. எங்கள் கடன் வழங்குபவர்கள் உண்மையில் அந்த முடிவை எடுக்க வேண்டும் என்று கூறினார்.

## 2023 முதல் வாரத்தில் 20 ஆயிரம் பேர் வருகை

வந்துள்ளனர் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ரஷ்யாவிலிருந்து 5,926 பேரும் இந்தியாவில் இருந்து 2,322 பேரும் ஐக்கிய இராச்சியத்திலிருந்து 1,571 பேரும், ஜேர்மனியிலிருந்து 1,515 பேரும் இலங்கைக்கு வருகைதந்துள்ளனர் என, அதிகாரசபை தெரிவித்துள்ளது.

2022ஆம் ஆண்டு ஜனவரியில் 82,327 சுற்றுலாப் பயணிகள் இலங்கை வந்தடைந்ததாகவும் அந்த ஆண்டில் ஒட்டுமொத்தமாக 719,978 பேர் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

பொருளாதார நெருக்கடி, எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் உள்ளிட்ட காரணிகளால், கடந்த ஆண்டு ஏப்ரல் முதல் சுற்றுலாப் பயணிகளின் வருகை கணிசமாகக் குறைந்த போதும் புதிய அரசாங்கம் பதவியேற்ற வருடத்தின் இறுதிக் காலாண்டில் சுற்றுலாப் பயணிகளின் வருகை படிப்படியாக அதிகரித்தமை குறிப்பிடத்தக்கது.

## நாமே இலங்கையின் நிரந்தர நண்பன்

சீன அரசாங்கத்தின் ஆதரவுடன் கொஸ்கம பொரலுகொடவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சீன இலங்கை நட்புறவு தகவல் தொழில்நுட்ப மையத்தின் திறப்பு விழாவில் நேற்று (12) கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

1956ஆம் ஆண்டு இந்நாட்டில் பண்டாரநாயக்கவும் பிலிப் குணவர்தனவும் இணைந்து ஏற்படுத்திய பாரிய சமூகப் புரட்சிக்கு சீன அரசாங்கம் மிகுந்த மரியாதை வைத்துள்ளது. அதனால்தான் சீன அரசு 1957 முதல் எமது நாட்டுடன் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்தது.

இவையனைத்துடனும் கூறப்பட வேண்டிய இன்னொரு முக்கியமான விடயம் என்னவெனில், எதிர்கால மக்கள் பிரதிநிதிகளும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்களும் மக்களின் எதிர்பார்ப்புகளைப் புரிந்துகொண்டு நாட்டுக்காகப் பணியாற்றுவது அவசியமாகும். அதைத்தான் இந்த நாடு உங்களிடமிருந்து எதிர்பார்க்கிறது. அந்த உண்மையை எப்பொழுதும் எம் உள்ளங்களில் சுமந்து கொண்டு பொது சேவையில் எம்மை அர்ப்பணிக்க வேண்டும் என்ற வேண்டுகோளையும் வைக்க விரும்புகிறேன் எனவும் தெரிவித்துள்ளார்.

## களனிதிஸ்ஸ இன்று செயலிழக்கலாம்

தேசிய மின் கட்டமைப்புக்கு சுமார் 165 மெகாவோட் மின்சாரத்தை வழங்கும் நிலையத்தை காலை வரை இயங்கச் செய்வதற்கான அளவு நப்தா மட்டுமே கையிருப்பில் உள்ளதாக தெரிவித்த அவர், பணம் கொடுத்தால் மட்டுமே நப்தாவை வழங்க பெற்றோலிய கூட்டுத்தாபனம் தயாராக உள்ளதாக குறிப்பிட்டார்.

தேவையான நப்தாவை கொள்வனவு செய்வதற்கு இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு பணம் செலுத்துவதற்கு மின்சார சபை அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் கூறினார்.

நேற்று மதியம் அல்லது அதற்கு பின்னர் பகுதியளவு பணம் செலுத்தப்பட்டால் நாப்தா கிடைக்கும் என்றும் சுட்டிக்காட்டினார்.

## சாகும் வரையான உண்ணாவிரத போராட்டம் கைவிடப்பட்டது

தமிழ் தேசிய பரப்பில் இயங்கும் அனைத்து கட்சிகளும் தமக்கிடையிலான ஆசன பங்கீட்டு பிரச்சினைகளை கைவிட்டு, தமிழ் மக்களின் அரசியல் அபிலாசையை வென்றெடுப்பதற்காக ஓரணியில் திரள வேண்டும் என வலியுறுத்தி இந்த போராட்டத்தை இவர் முன்னெடுத்துவந்தார். இந்த நிலையில் நேற்று உண்ணாவிரத போராட்டம் இடம்பெறும் இடத்துக்கு வருகைதந்த தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் சி வி விக்னேஸ்வரன் , மற்றும் டெலோ கட்சியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ,ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஸ் பிரேமசந்திரன் மற்றும் புளொட் அமைப்பின் உறுப்பினரும் முன்னாள் மாகாணசபை அமைச்சருமான கந்தையா சிவநேசன் மற்றும் ஜனநாயக போராளிகள் கட்சியை சேர்ந்த அங்கத்தவர் ஒருவர் ஆகியோர் எழுத்துமூல ஆவணத்தில் தாம் அனைவரும் ஒன்று சேர்ந்து கூட்டாக செற்படுவோம், மேற்படி உண்ணாவிரதம் இருக்கும் நபரின் கோரிக்கையை வலுப்படுத்த ஒன்றிணைவோம் என்ற உறுதிமொழியை வழங்கி கையொப்பமிட்ட பின்னர் உண்ணாவிரதம் மேற்கொண்ட நபருக்கு நீராகாரம் வழங்கி உண்ணாவிரதம் முடித்து வைக்கப்பட்டிருந்தது.

## முட்டை இறக்குமதி செய்ய முடியாது

உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் டொக்டர் ஹேமலி கொத்தலாவல தெரிவித்தார். விலங்குகள் இறக்குமதி செய்யப்படும் நாட்டில் முந்தைய ஆறு மாதங்களில் பறவைக் காய்ச்சல் பரவியதாக பதிவு செய்யப்பட்டிருக்க கூடாது என்று விலங்குகள் ஆரோக்கியத்துக்கான உலக ஸ்தாபனம் தெரவித்துள்ளது. அதற்கிணங்க கடந்த ஆறு மாதங்களில் தங்கள் நாட்டில் பறவை காய்ச்சல் இல்லை என்று அந்த நாடு சான்றிதழை வழங்க வேண்டும் என்றும் அதன்பின்னர், அந்த சான்றிதழின் அடிப்படையில், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர் நாயகம் விலங்குப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதியை வழங்குவார். எனினும், இந்தியாவில் இருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் கடந்த ஆறு மாதங்களில் நாட்டில் அங்கு பறவைக் காய்ச்சல் பரவியுள்ள நிலையில், இந்தியா மற்றும் பாகிஸ்தானில் இருந்து முட்டை மற்றும் கோழி இறைச்சியை இறக்குமதி செய்ய கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார துறையால் எந்த பரிந்துரையும் வழங்க முடியாது எனவும் சுட்டிக்காட்டினார்.

## அடக்குமுறை மூலம் பதிலளித்துள்ளார்

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அடக்குமுறை மூலம் பதிலளித்துள்ளதாக மனித உரிமை கண்காணிப்பகத்தின் தெற்காசிய பிராந்திய பணிப்பாளர் மீனாட்சி கங்குலி தெரிவித்துள்ளார்.

சர்வதேச மனித உரிமைகளை மீளாய்வு செய்யும் தனது 2023 ஆம் ஆண்டுக்கான அறிக்கை ஊடாக மனித உரிமை கண்காணிப்பகம் இதனை இன்று தெரிவித்துள்ளது.

பல ஆண்டுகால தவறான நிர்வாகம் காரணமாக குற்றவாளிகளுக்கு தண்டனை கிடைக்காமை, ஊழல், சட்டத்தின் ஆட்சியை ஒடுக்கியதன் பின்னர் உருவான கடுமையான பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையில் கடந்த ஆண்டு ஆயிரக்கணக்கான மக்கள் வீதியில் இறங்கி போராடினர். இதனால் அப்போதைய ஜனாதிபதி பதவி துறக்க நேர்ந்தது. அதன் பின்னர் புதிய ஜனாதிபதியாக பதவியேற்ற ரணில் விக்ரமசிங்க, பெரும்பாலும் அமைதியாக முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்பு போராட்டத்தை அடக்கினார். அதன் செயற்பாட்டாளர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். கடந்த காலத்தில் சட்டங்கள் மீறப்பட்டமை சம்பந்தமாக நீதியை வேண்டி விடுக்கப்பட்ட கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படவில்லை எனவும் மனித உரிமை கண்காணிப்பகத்தின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

கட்டுமானத் துறையினரால்

# வங்கிக் கடன்களை மீள செலுத்துவதில் சிரமம்

தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலையில் கட்டுமானத் துறை எதிர்நோக்கும் சிக்கல்கள் குறித்து பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பிலான குறுகிய கால மற்றும் நடுத்தர கால நிகழ்ச்சித்திட்டங்களை அடையாளம் காணல் பற்றிய தேசிய பேரவையின் உப குழுவில் கலந்துரையாடப்பட்டது.



பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பிலான குறுகிய கால மற்றும் நடுத்தர கால நிகழ்ச்சித்திட்டங்களை அடையாளம் காணல் பற்றிய தேசிய பேரவையின் உப குழு அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தலைமையில் நேற்று முன்தினம் (11) பாராளுமன்றத்தில் கூடிய போதே இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.


நாட்டின் கட்டுமானத் துறையுடன் சம்பந்தப்பட்ட அரச மற்றும் தனியார் துறையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல தரப்பினர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டிருந்ததுடன் சம்பந்தப்பட்ட துறையினர் முகங்கொடுக்கும் சிக்கல்கள் தொடர்பில் கருத்துகள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

கட்டுமானத் துறையில் நேரடியாகப் பணிபுரியும் சுமார் 650,000 ஊழியர்களும், மறைமுகமாகப் பணிபுரியும் சுமார் 700,000 ஊழியர்களும் உள்ளதாக இதன்போது கலந்து கொண்ட பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர். எனினும் தற்பொழுது கட்டுமானத் துறை வீழ்ச்சியடைந்துள்ளதன் காரணமாக இந்தப் பணியாளர்கள் நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

அதேபோன்று, தற்பொழுது நிர்மாணிக்கப்பட்டுள்ள மாடி வீடுகள் மற்றும் அலுவலகம் போன்ற கட்டுமானங்களை விற்பனை செய்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும் இவர்கள் சுட்டிக்காட்டினர்.

மேலும், தற்பொழுது நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டுமானங்களின் ஒரு பகுதிக்கு அரசாங்கத்தால் கட்டணம் செலுத்தாததனால் வங்கிக் கடன்களை மீள செலுத்துவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர். அதேபோன்று, பொருளாதார நெருக்கடி காரணமாக கட்டுமானத் துறையிலுள்ளவர்கள் நாட்டை விட்டு வெளியேறும் நிலைமை ஏற்பட்டுள்ளமை இங்கு புலப்பட்டது.

இங்கு கருத்துத் தெரிவித்த உபகுழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க குறிப்பிடுகையில், இந்தச் சிக்கல்களுக்கு நிதி தேவைப்படும் தீர்வுகள், நிதி தேவைப்படாத தீர்வுகள் மற்றும் சட்ட ரீதியான தீர்வுகள் என்பவற்றை வேறுவேறாக கண்டறிந்து செயற்படவில்லை எனின் நாட்டின் பொறியியற்றுறை பாரியளவில் வீழ்ச்சியடையும் எனக் குறிப்பிட்டார். இதனால் விரைவில் இது தொடர்பான முன்மொழிவுகளை பாராளுமன்றத்துக்கும் அரசாங்கத்துக்கு முன்வைக்க எதிர்பார்ப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.



இலங்கையில் புதிய முதலீட்டு வாய்ப்புகள்

## ஜப்பானிய வர்த்தகர்கள் அவதானம்

ஜப்பானிய அமைச்சரவை அலுவலக இராஜாங்க அமைச்சர் சடோஷி புஜிமரு உள்ளிட்ட ஜப்பானிய வர்த்தகர்கள் குழு நேற்று முன்தினம் (11) பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்தது. இலங்கையில் புதிய முதலீட்டு வாய்ப்புகள் குறித்து இதன் போது ஆராயப்பட்டதோடு விருந்தோம்பல் மற்றும் சுற்றுலா, சுரங்கக் கைத்தொழில், தொழிலாளர் பயிற்சி உட்பட இலங்கையிலுள்ள முதலீட்டு வாய்ப்புகள் குறித்து இங்கு விசேட கவனம் செலுத்தப்பட்டது.

அரசாங்கத்தின் பொருளாதாரத் திட்டங்களின் கீழ், புதிய மற்றும் வளர்ந்து வரும் கைத்தொழில்களுக்கு ஏற்றவாறு நாட்டை மாற்றியமைக்கும் வகையில் இலங்கையின் இளைஞர்களுக்கு பயிற்சி அளிப்பதில் கவனம் செலுத்தப்படுவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார். தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, சர்வதேச அலுவல்கள் தொடர்பான ஜனாதிபதி பணிப்பாளர் தினுக் கொலம்பகே ஆகியோரும் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.



தமிழக முதலமைச்சருக்கு

## 'யாழ்' வழங்கிய சுமந்திரன்

தமிழக அரசின் ஏற்பாட்டில் 'அயலகத் தமிழர் தின நிகழ்வு' சென்னையில் நேற்று முன்தினமும், நேற்றும் நடைபெற்றது. தமிழக முதலமைச்சர் மு.க ஸ்டாலின் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ சுமந்திரன், இலங்கை வாழ் தமிழ் மக்களின் நன்றி மறவா அன்பளிப்பாக தமிழக முதலமைச்சர் மு.க ஸ்டாலினுக்கு 'யாழ்' ஒன்றைப் பரிசாக வழங்கி வைத்தார்.

## சுவாமி விவேகானந்தரின் 160ஆவது நினைவுதினம்

க. அகரன்



வவுனியா ரயில் நிலைய வீதிலுள்ள சுவாமி விவேகானந்தரின் நினைவுத் தூபியில் நேற்று (12) காலை 9 மணியளவில் அன்னாரின் 160 ஆவது பிறந்ததின நினைவு தினம் நடைபெற்றது.

சிலையை பராமரிக்கும் சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தின் அனுசரணையில், வவுனியா நகர சபையின் ஏற்பாட்டில் வவுனியா நகர சபையின் உபதபிசாளர் சு.குமாரசாமி தலைமையில் இடம்பெற்ற நினைவு தின நிகழ்வில் சிறப்புச் சொற்பொழிவை 'தமிழ்மணி' அகளங்கன் நிகழ்த்தினார். இதையடுத்து மலர் மாலை அணிவித்து, மலர் தூவி நினைவு தின நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் சுத்தானந்தா இந்து இளைஞர் சங்கத்தின் தலைவர் ப.சத்தியநாதன் மற்றும் உறுப்பினர்கள், நகர சபை உறுப்பினர்களான பிரதாப், சுமந்திரன், 'தமிழ் விருட்சம்' அமைப்பின் தலைவர் சந்திரகுமார், ஓட்டோ உரிமையாளர் சங்கத்தின் தலைவர் ரவீந்திரன், சமூக ஆர்வலர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.





## நலன்புரி பயனாளிகளின் பட்டியலை இன்னமும் தயாரிக்க முடியவில்லை

### அரசாங்க நிதி பற்றிய குழுவில் வெளிப்பட்டது

சமுர்த்தி கொடுப்பனவுகளை வழங்கும்போது வெளிப்படைத் தன்மையுடன் அதன் பயனாளிகளை அடையாளம் காண்பதற்கான பட்டியலைத் தயாரிப்பதற்கான தகவல்களை சேகரிப்பதற்கான பணியை சமுர்த்தி அதிகாரிகள் நிராகரித்திருப்பதன் ஊடாக, சிக்கல் நிலைமை ஏற்பட்டிருப்பதாக அண்மையில் நடைபெற்ற அரசாங்க நிதி பற்றிய குழுவில் புலப்பட்டது.

அரசாங்க நிதி பற்றிய குழு அதன் தலைவர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தலைமையில் கூடியபோதே இந்த விடயம் புலப்பட்டது. சமுர்த்தி உள்ளிட்ட நலன்புரி கொடுப்பனவுகளைச் செலுத்தும்போது ஊழல் இன்றி வெளிப்படைத்தன்மையுடன் இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பது சர்வதேச நாணய நிதியத்தின் முன்மொழிவு என்றும், இதற்கான பொறுப்பு நலன்புரி நன்மைகள் சபைக்கு உள்ளதாகவும் இங்கு மேலும் தெரியவந்தது. இதற்கமைய இந்தத் தகவல்களைச் சேகரிக்கும் பணிக்கான ஏற்பாடுகளை வழங்குவதற்காக இந்த வர்த்தமானி அறிவித்தலில் ஒழுங்குவிதி வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த நலன்புரி நன்மைகள் சபையின் தலைவர் பி.விஜேரத்ன, பதிவுசெய்யப்பட்ட பயனாளிகளின் வீடுகளுக்குச் சென்று சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய விண்ணப்பதாரிகளால் வழங்கப்பட்ட விவரங்களுக்கான தகவல்களைப் பெற்றுக்கொள்ளும்போது சட்டத்தின் 21 மற்றும் 22வது பிரிவுகளுக்கு அமைய தனது வேலையை இழக்கவேண்டிய நிலை இருப்பதாகவும், இந்தப் பிரிவைத் திருத்தும் வரையில் இது தொடர்பான களப்பணிகளிலிருந்து விலகுவதாக சமுர்த்தி, கிராமசேவகர், பொருளாதார அபிவிருத்தி அதிகாரிகளின் தொழிற்சங்கங்கள் தெரிவித்திருப்பதாகக் கூறினார்.

# பொங்கல் பண்டிகை

### விருந்தோம்பல், நன்றி கூறுதல், மதிப்பளித்தல் போன்ற தமிழர்களின் நற்பண்புமிக்க பாரம்பரியங்களை பிரதிபலிக்கும் உன்னத திருநாள்

மிருணாளினி நடராஜன்







தமிழர்களின் நற்பண்புகளான விருந்தோம்பல், நன்றி கூறுதல், எல்லோருக்கும் மதிப்பளித்தல் போன்ற பாரம்பரியங்களை பிரதிபலிக்கும் ஓர் உன்னத திருநாளாக பொங்கல் பண்டிகை திகழ்கின்றது.

வேளாண்மைக்கு வேண்டிய மழை நீரையும் சூரிய ஒளியையும் காற்றையும் தேவைக்கேற்ப வழங்கி, எம்மை செழிப்புடன் வாழ உதவிய இயற்கைக்கும் (பூமி, சூரியன், வளிமண்டலம், நீர் நிலைகள்) தம்மோடு சேர்ந்து கஷ்டப்பட்டு உழைத்த கால்நடைகளுக்கும், தொழிலாளர்களுக்கும் தமது நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவிக்கும் விழாவாக உழவர்களால் பொங்கல் பண்டிகை கொண்டாடப்பட்டு வந்துள்ளது.

### வாழ்வும் வளமும் சிறக்கும்

ஆண்டுதோறும் தை மாதம் முதல் ஆனி மாதம் வரையுள்ள ஆறு மாதங்கள் உத்தராயணம் என்றும், ஆடி முதல் மார்கழி வரையுள்ள மாதங்கள் தட்சிணாயணம் என்றும் கூறப்படுகிறது. இதில் தை மாதம் முதலாம் திகதியை மகர சங்கராந்தி, தைப் பொங்கல் என்று கொண்டாடுகிறோம்.

'உழவர் சேற்றில் கால் வைத்தால்தான் ஏனையோர் சோற்றில் கை வைக்க முடியும்' என்பது பலரும் அறிந்த பழமொழி. அதனால் போலும், பொங்கல் என்பதற்கு 'பொங்கி வழிதல்', 'பொங்குதல்' என்பது பொருள். அதாவது, புதிய பானையில் பால் பொங்கி எழுந்து, பொங்கி வழிந்து வருவதால், எதிர்காலம் முழுவதும் நம் வாழ்வும், வளமும் அந்தப் பால் போன்று பொங்கிச் சிறக்கும் என்பதும், களனியெல்லாம் பெருகி, அறுவடை மேன்மேலும் அதிகரிக்கும் என்பதும் பொங்கல் பண்டிகையின் மேலோங்கிய தத்துவமும் தொன்றுதொட்டு வரும் நம்பிக்கையுமாகும்.

### புனித இடம்

தைப்பொங்கல் தினத்தன்று ஒவ்வொரு குடிமகனும் தம்வீட்டுப் பொங்கல் படையல், சூரியன் உதிக்கும் போதே முதல் நல்விருந்தாக அமைய வேண்டும் என்ற ஆதங்கத்தில் அதிகாலையே விழித்தெழுந்து பொங்கலுக்கான ஆயத்தங்களைச் செய்வான். எல்லோரும் அதிகாலையில் தோய்ந்து, வீடு பெருக்கி, கழுவி, முற்றம் கூட்டி, வாசலில் சாணம் கொண்டு மெழுகி, அதில் உலக்கை வைத்து அரிசி மா, மஞ்சள் மாவால் அல்லது செங்கட்டி மண்ணால் கோலம் போடுவார்கள். முற்றம் சீமெந்தால் ஆனதாயின் அதைக் கழுவி, கோலம் போடுவார்கள்.

கோலம் போட்டு, குறிக்கப்பட்ட இடத்தை புனித இடமாக மதிப்பார்கள். கோலம் போடப்பட்ட இடத்தை நான்கு கரும்புகள் நட்டு, அதில் நூல் கட்டி, தோரணம், மாவிலை தொங்க விடுவார்கள். கோலமிட்டு புனிதமாக்கிய இடத்தின் நடுவில், புதிதாக மண்ணால் பிடித்து வைத்த மூன்று அடுப்புகளை வைத்து, பொங்கல் பானை வைப்பதற்கு அடுப்பை தயார்படுத்துவார்கள். சூரிய பகவானுக்கு பொங்கல் பொங்கும் முன்னர், வீட்டின் சுவாமி அறையில் தீபம் ஏற்றி வணங்கியபின்னர், சூரிய பொங்கலை ஆரம்பிப்பார்கள்.

குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் ஒன்றுகூடி தோத்திரங்கள் பாடி நிற்க, சாணத்தால் பிள்ளையார் பிடித்து வைத்து, நிறைகுடம் வைத்து, குத்துவிளக்கு ஏற்றி, தேங்காய் உடைத்து வைத்து தூபம், தீபம் காட்டி விநாயகரை வழிபட்ட பின்னர், அடுப்பில் நெருப்பு மூட்டி, புதுப்பானையின் கழுத்தில் மாவிலை, இஞ்சி இலை, மஞ்சள் இலைகளைக் கட்டி(காப்புக் கட்டி), விபூதிக் குறிகள் வைத்து, திலகமிட்டு புனிதமாக்கி, அதற்குள் நீரும் பசுப்பாலும் விட்டு, அடுப்பில் பொங்க வைப்பார்கள்.

பால் பொங்கி எழுந்து வழியும் வரை, நெருப்பை கூட எரிய விடுவார்கள். பால் பொங்கி வழியும்போது கடவுளை வணங்கி, "பொங்கலோ பொங்கல்" என ஆரவாரித்து, புது அரிசியை வீட்டுத் தலைவர் இரண்டு கைகளாலும் அரிசியை கிள்ளி, மூன்று முறை (வலஞ்சுளியாக) சுற்றி, பானையில் இட்டு மகிழ்ச்சியுடன் பொங்கலிடுவார்கள்.

அப்போது, சக்கரைப் பொங்கலாயின் பயிற்றம் பருப்பு, சர்க்கரை, கஜு, ஏலக்காய் முதலியவற்றை போட்டு பொங்கல் செய்வார்கள். பொதுவாக, தைப்பொங்கலின்போது சர்க்கரைப் பொங்கலே பொங்குவது வழக்கம்.

பால் பொங்கி அரிசி போட்ட பின்னர், பானையில் இருக்கும் மிதமிஞ்சிய நீரை ஒரு சுத்தமான பாத்திரத்தில் எடுத்து, அதைப் பூஜைகள் முடியும் வரை வைத்திருந்து, அதனை மாவிலை கொண்டு வீட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் படும் படியாக தெளிப்பார்கள். அந்நீரில் சூரியனின் சக்தி இருப்பதால், சூரிய பகவானின் சக்தி எல்லா இடங்களிலும் பட்டு பிரகாசிக்கும் (தோஷங்கள் நீங்கும்) என்பது நம்பிக்கை.

### சூரியனுக்குப் படையல்

பொங்கிய பொங்கலை, தலைவாழையிலையில் படைத்து, அதன் மேல் பகுதியில் வாழைப்பழத்தை உரித்து வைத்து, அதன் மீது தயிர் விட்டு, சக்கரையும் வைப்பார்கள். வடை, மோதகம், முறுக்கு போன்ற பலகாரங்களை இன்னொரு தலைவாழையிலையிலும், சுத்தம் செய்த பழங்களை வேறு ஒரு தலைவாழையிலையிலும் படைப்பார்கள்.

படையல் படைக்கும் போது, சூரியனுக்கு வலப் பக்கத்தில் இலையின் அகன்ற பகுதி இருக்குபடி படைத்தல் வேண்டும். வாழை இலைகளில் படைத்த பின்னர், தேங்காய் உடைத்து வைத்து, சூரிய பகவானுக்கு தூப, தீபம் ஆராத்தி எடுத்து பக்தியோடு பஜனை பாடி, சூரியனை வணங்குவார்கள். சூரியனுக்கு படைத்த (படையல்) பொங்கலை அனைவரும் சேர்ந்து உண்டு மகிழ்ந்து, பொங்கல் தினத்தை சிறப்பாக கொண்டாடுவார்கள்.

உறவினர்கள், நண்பர்கள், துக்க நிகழ்வுகள் (ஆசூசம்) அல்லது வேறு சமூகத்தவர் என்னும் காரணமாக பொங்காது இருந்தால், அவர்களுக்கும் பொங்கலை பரிமாறி, அவர்களையும் மகிழ்விப்பார்கள். பொங்கல் பண்டிகை நாளில், ஊரில் பல பாகங்களிலும் தமிழன் பாரம்பரியத்தை பறைசாற்றும் வகையில், முத்தமிழ் (இயல், இசை, நாடக) கலைநிகழ்ச்சிகள், வீரவிளையாட்டுகள் இடம்பெறும்.

தற்பொழுது, பொங்கல் விழாவானது முன்போல் வீடுகளில் மட்டுமன்றி, கோவில்கள், தேவாலயங்கள், கல்விக் கூடங்கள், தொழில் நிலையங்கள் என்பவற்றிலும், இந்துக்கள் அல்லாத தமிழ் மக்களால் வெகு சிறப்பாக கொண்டாடப்பெற்று வருவதால், தமிழர் பண்டிகையாக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப் பெற்று சிறப்படைகின்றது.

### புதிர் எடுத்தல்

உழவர்கள், மார்கழி மாதத்தில் (தைப்பொங்கலுக்கு முன்) ஒரு நல்ல நாள் பார்த்து 'புதிர் எடுத்தல்' நிகழ்வை நடத்துவார்கள். குடும்பத்தலைவர் குறிப்பிட்ட தினத்தில் காலையில் குளித்து, கடவுளை வணங்கி வயலுக்குச் சென்று, வயல் வரம்பில் முதற்கடவுளான பிள்ளையாரை வைத்து பூ, பழம், பாக்கு, வெற்றிலை ஆகியவற்றை படைத்து, தேங்காய் உடைத்து விநாயகரையும் குலதெய்வத்தையும் வணங்கி, அதன் பின்னர் அறுவடைக்குத் தயாராக இருக்கும் நெற்கதிர்களில் சிறிதளவை வெட்டி, வீட்டுக்குக் கொண்டு செல்வார்.

இதேநேரம் குடும்பத்தலைவி தோய்ந்து, வீடு பெருக்கி, கழுவி, புதிர் வாங்குவதற்கு தயாராக இருப்பார். தலைவன் கொண்டு வருகின்ற நெற்கதிர்களை மனையாள் வாங்கி, சாமியறைக்கு கொண்டு செல்லும் வழக்கம் உண்டு. அதன்பின்னர் கடவுளை வணங்கி புதிய நெற்கதிர்களை சாமியறையிலும் சமையல் அறையிலும் கட்டித் தொங்கவிடுவார்கள்.

மிகுதியாக உள்ள நெற்கதிர்களை அரிசியாக்கி தைப் பொங்கலுக்காக வைத்திருப்பார்கள். இவ்வாறு செய்வதன் மூலம், வருடம் முழுவதும் அவர்களுக்கு சாப்பாட்டுக்கு குறைவிருக்காது என்பது நம்பிக்கையாகும்.

### தலைப்பொங்கல்

புதுமனை, புதுமணமக்கள் இருப்பவர்கள் பொங்கல் விழாவை 'தலைப் பொங்கல்' என வெகு சிறப்பாக கொண்டாடுவார்கள். வீட்டிற்கு வெள்ளையடித்து, வீட்டை அலங்கரித்து, தாமும் புத்தாடை அணிந்து சூரிய பகவானின் ஆசியைப் பெறுவதில் கண்ணும் கருத்துமாக இருப்பார்கள். துக்கமான நிகழ்வுகள் நிகழ்வுற்ற குடும்பத்தினர் பொங்கல் விழாவை ஒரு வருடத்திற்கு தவிர்த்துக் கொள்வார்கள்.

### நான்கு நாள் கொண்டாட்டம்

மார்கழியின் கடைசி நாள் போகி பண்டிகை கொண்டாடப்படுகிறது. பழையன கழிதலும், புதியன புகுதலுமே போகிப் பண்டிகையின் நோக்கமாகும்.

தை முதலாம் நாள் தைப்பொங்கல் ஆகும்.

தைப்பொங்கலுக்கு அடுத்தநாள் மாட்டுப் பொங்கல் அல்லது பட்டிப் பொங்கல் கொண்டாடப்படுகிறது. இந்த நாளில் மாட்டுத் தொழுவத்தில் பொங்கல் வைத்து, கால்நடைகளுக்கு நன்றி தெரிவிக்கின்றனர்.

இதற்கு அடுத்தநாள், காணும் பொங்கல் கொண்டாடப்படுகிறது. இதை கணு பொங்கல் என்றும், கன்னி பொங்கல் என்றும் சொல்வதுண்டு. இந்த நாளில் மக்கள் தங்களின் உறவினர்கள், நண்பர்கள் ஆகியோரை சென்று சந்தித்து, தங்களின் மகிழ்ச்சி, வாழ்த்து மற்றும் இனிப்புகள், பலகாரங்கள் ஆகியவற்றைப் பரிமாறிக் கொள்வார்கள்.

தமிழரசு வெளியேறினாலும்

# தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பலம் குறையவில்லை

■ க. அகரன்

தமிழரசுக் கட்சி வெளியேறினாலும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் இருந்து வெளியேறியவர்கள் மீள இணைந்துள்ளமையால், இந்தக் கூட்டு பலமடைந்துள்ளது என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், டெலோ அமைப்பின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவிலுள்ள தமிழீழ விடுதலை இயக்கத்தின் (டெலோ) அலுவலகத்தில் நேற்று முன்தினம் (11) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் இறுதியாக மூன்று கட்சிகள் இணைந்து பயணித்தன. நானும், சித்தார்த்தனும் கட்சி ரீதியாக தமிழரசு கட்சிக்கு கடிதம் எழுதினோம். ஏனைய கட்சிகளையும் அரவணைத்து, தமிழ்த் தேசிய கூட்டமைப்பை பலப்படுத்தி, அதனூடாக நாங்கள் எல்லோருக்கும் வலுவான ஒற்றுமையாக இருப்பதாக காட்ட முடியும். மக்களது அபிலாஷைகளை வென்றெடுக்க முடியும் என்று அதில் குறிப்பிட்டிருந்தோம்.



ஆனால், அந்த கடிதத்துக்கான பதில் வருவதற்கு முன்னர், உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழரசுக்கட்சி தனித்து போட்டியிடுகின்ற முடிவை எடுத்திருந்தார்கள். அந்தவகையில், நாங்கள் வைத்த கோரிக்கைக்கு பதில் தராது, வெளியில் செல்லும் நிலையை அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள்.

கூட்டமைப்பில் இருந்து வெளியே சென்ற கட்சிகளில் உள்ளே வரவேண்டும் என கருதிய கட்சிகள் எல்லோரும் அணிதிரண்டுள்ளோம். குறிப்பாக இந்தச் சந்தர்ப்பத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் எமது கூட்டில் இணைய வேண்டும். தமிழ் மக்களின் பிரச்சினையை வென்றுறெடுப்பதற்கு, நாங்கள் பலமான கூட்டாக, ஒற்றுமையாக பயணிக்க வேண்டும். அதனடிப்படையில் இந்தக் கூட்டில் வந்து இணைய வேண்டும் என அவர்களிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

இந்தக்கூட்டு, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட நோக்கத்தின் அடிப்படையில் செயற்படும். கூட்டமைப்பில் இருந்து ஒரு கட்சி விலகிச் சென்றாலும், கூட்டமைப்பு சிதைவுற முடியாது. மக்கள் எமது பக்கம் இருப்பார்கள்.

இந்தத் தேர்தல் முடிந்த பின்னர் சட்ட ரீதியாக பதிவு செய்யப்பட்ட கட்டமைப்பை உருவாகுகின்ற, தொடர்சியான தலைமைத்துவத்தை கொண்டிருக்கின்ற, மக்களது ஆலோசனைகளைப் பெறுகின்ற செயற்பாடுகளை செய்ய இருக்கின்றோம். சுழற்சி முறையில் தலைமைத்துவம் பேணப்படும். பொதுச் சின்னம் தெரிவு செய்யப்படும். தற்போது பொதுச் சின்னத்தில் போட்டியிட வாய்ப்புள்ளது எனவும் தெரிவித்தார்.

# கொழும்பு யாழ்ப்பாணத்துக்கான பஸ் சேவை

■ நடராசா கிருஸ்ணகுமார்

இடைநிறுத்தப்பட்டிருந்த இலங்கை போக்குவரத்து சபையின் கொழும்புக்கான பஸ் சேவை, கடந்த வாரம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கான பஸ் சேவை, யாழ்ப்பாணத்தில் இருந்து இரவு 7.00 மணியளவில் ஆரம்பித்து சாவகச்சேரி, பூநகரி, முழங்காவில், வெள்ளாங்குளம், மல்லாவி, மாங்குளம், வவுனியா ஆகிய இடங்களூடாக கொழும்பை சென்றடையும்.

கொழும்பில் இருந்து இரவு 7.30 மணிக்கு பயணத்தை ஆரம்பிக்கும் பஸ், இதே வழித்தடத்தின் ஊடாக, யாழ்ப்பாணத்தை நோக்கிப் பயணிக்கும். இலங்கை போக்குவரத்து சபையின் கிளிநொச்சி கிளையால் இந்த பஸ் சேவை நடத்தப்படுகின்றது.



# கிளிநொச்சியில் விசேட கல்வி அலகு திறப்பு



கிளிநொச்சி, புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியால வளாகத்தில் 22ஆவது விசேட கல்வி அலகு நேற்று முன்தினம் (11) திறந்துவைக்கப்பட்டது. பாடசாலையின் அதிபர் கண்ணபிரான் தலைமையில் நடைபெற்ற திறப்பு விழாவில், கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை உளவள வைத்திய அதிகாரி டொக்டர் ம. ஜெயராசா, வனபிதா ஞானரூபன் அடிகளார் ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்து கொண்டு, மலர்வன விசேட கல்வி அலகைத் திறந்து வைத்தனர். இந்நிகழ்வில் விசேட கல்வி உதவி பணிப்பாளர் ஜெயகரன், வடக்கு – கிழக்கு பசுமை இல்ல பணிப்பாளர் வினோத்குமார், கிளிநொச்சி தெற்கு வலயத்தின் சங்கீத பாட ஆசிரிய ஆலோசகர் கிருஸ்ணானந்தன், புதுமுறிப்பு கிராம சேவகர் எனப் பலர் கலந்து கொண்டனர்.

சுப்பிரமணியம் பாஸ்கரன்



# தம்பதியை வெட்டி காயப்படுத்தியவர் கைது

■ செந்தூரன் பிரதீபன்

இருபாலை, மடத்தடி பகுதியில் கடந்த வாரம், வீட்டில் இருந்த கணவன்- மனைவி இருவரையும் வெட்டி காயப்படுத்திவிட்டு, கடந்த பத்து நாள்களாக தலைமறைவாக இருந்தவர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்,

மடத்தடி பகுதியில் வீடு புகுந்து, கணவன் - மனைவியை வாளால் வெட்டி காயப்படுத்திவிட்டு, வலைப்பாடு பகுதியில் தலைமறைவாகியிருந்த சந்தேக நபர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதோடு தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட வாளும் சந்தேக நபரின் வீட்டின் கோழிக் கூட்டுக்குள் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளது.

# நெல்லை களஞ்சியப்படுத்த உலர வைத்து கொண்டுவரவும்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி, கனகாம்பிகை குளத்தில் அமைந்துள்ள மாவட்டத்துக்கான தானியக் களஞ்சியசாலையில், மண்ணெண்ணெய் விலையேற்றம் காரணமாக நெல்லை சுத்தப்படுத்தி, களஞ்சியப்படுத்துதற்கு அதிக செலவாகும் என்பதால், விவசாயிகள் அறுவடை செய்யும் காலபோக நெல்லை, உலர வைத்து கொண்டுவருவதன் மூலம், சுத்தப்படுத்தி களஞ்சியப்படுத்த முடியும் என களஞ்சிய முகாமையாளர் தெரிவித்துள்ளார்.
குறித்த தானியக் களஞ்சியத்தில் நெல்லை உலர வைப்பதற்குரிய இயந்திரத்துக்கு மண்ணெண்ணெய் பயன்படுத்தப்பட்டு வருகின்ற நிலையில், தற்போது மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை 365 ரூபாயாக காணப்படும் நிலையில், நெல்லை உலர வைப்பதில் சிக்கல் நிலை தோன்றியுள்ளது. எனவே, கிலோ கிராம் ஒன்றுக்கு எட்டு ரூபாய்க்கு மேல் செலவாகும் என்பதால், விவசாயிகள் நெல்லை உலர வைத்து கொண்டு வரும் போது அவற்றைக் களஞ்சியப்படுத்த இலகுவாக இருக்கும் என தானிய களஞ்சிய முகாமையாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.



வவுனியாவில் புனர்வாழ்வு நிலையத்தில்

# ‘ஐஸ்’க்கு அடிமையாகியவர் மரணம்

■ க. அகரன்

போதைப் பொருளுக்கு அடிமையாகி, வவுனியா பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்தில் புனர்வாழ்வு பெற்று வந்த குடும்பஸ்தர் நேற்று (12) மரணமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான 35 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர், போதைப்பொருளுக்கு அடிமையாகிய நிலையில், அவருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில், நீதிமன்ற உத்தரவுக்கமைய செப்டெம்பர் மாதம் 24 ஆம் திகதி புனர்வாழ்வுக்காக பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்தில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இவரது உடல்நிலை மோசமடைந்ததைத் தொடர்ந்து, வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார். சட்ட வைத்திய அதிகாரியால், அவரது சடலத்தை ஊடற்கூற்று பரிசோதனைக்கு உட்படுத்திய போது, ஐஸ் போதைப்பொருளை அதிகளவில் உள்ளெடுத்தமையால், நுரையீரல் மற்றும் உடற்பாகங்களில் ஏற்பட்ட பாதிப்பு காரணமாக மரணம் ஏற்பட்டதாக சட்ட வைத்திய அதிகாரி தெரிவித்தார். சடலம் அவரது குடும்பத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# வாழைச்சேனை கல்முனை மீனவர்களின் முரண்பாடுகளுக்கு தீர்வு

■ நூருல் ஹுதா உமர்



வாழைச்சேனை மீனவர்களுக்கும் கல்முனை மீனவர்களுக்கும் இடையில், வாழைச்சேனை மீன்பிடித்துறைமுகத்திலும் கடற்கரைகளிலும் தொடரும் முரண்பாடுகளுக்கு தீர்வுகாணும் பேச்சுவார்த்தை, மாளிகைக்காடு அந்நூர் கலாசார மண்டபத்தில், அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.சி.எம் றியாஸின் ஒருங்கமைப்பில் இடம்பெற்றது.

உலமாக்கள், காரைதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர்.எஸ். ஜெகத், அம்பாறை மாவட்ட அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளன தலைவர் டொக்டர் எஸ்.எம்.ஏ அஸீஸ், மாளிகைக்காடு அந்நூர் ஜும்மா பள்ளிவாசல் தலைவர் எம்.எம் பௌசர், வாழைச்சேனை அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளன உப தலைவரும், பொலிஸ் பரிசோதகருமான ஏ. அமீரலி உட்பட மீனவர் சங்கங்கள் கலந்துகொண்டு கலந்துரையாடி, இருதரப்பும் ஏற்றுக்கொள்ளும் வகையிலான தீர்வொன்றுக்கு வந்தன.

படகு தரித்தல், மீன் விற்பனை, போதையொழிப்பு, மீனவர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள், மீன் வியாபாரிகளுடனான உறவுகளை பேணுதல் போன்ற விடயங்களை ஆராய்ந்து, ஒப்பந்தம் கைச்சாத்திடுவது தொடர்பிலும், இருதரப்பினதும் அங்கத்துவத்துடன் கூடிய கண்காணிப்பு நிர்வாக குழுவை அமைப்பது தொடர்பிலும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

# மாணவருக்கு போதைப்பொருள் விழிப்புணர்வு செயலமர்வு

■ நூருல் ஹுதா உமர்



மாணவர் சமூகத்தின் மத்தியில் காணப்படும் போதைப்பொருள் பாவனையை இல்லாமல் செய்யும் பொருட்டும், அது தொடர்பாக மாணவர்களை விழிப்படைய செய்யும் வகையிலும் ஐ.ஆர்.ஒ ஶ்ரீ லங்கா தொண்டு அமைப்பு வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

கல்முனை அல்-மிஸ்பா மகா வித்தியாலயத்தில் கா.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கு நடைபெற்ற நேற்றைய செயலமர்வில், பிரதம வளவாளராக சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பிரதி பொலிஸ் அதிகாரியும், போதைவஸ்து தடுப்பு மற்றும் சுற்றுச்சூழல் பொறுப்பதிகாரியுமான எ.எல்.எம் ரவுப் கலந்து கொண்ட நிகழ்வில், ஐ.ஆர்.ஒ ஶ்ரீலங்கா அமைப்பின் நிர்வாக இயக்குநர் ஏ. றொஸான் முஹம்மட் பங்கேற்புடன் கல்முனை மிஸ்பா மகா வித்தியாலயத்தின் அதிபர் எம்.ஐ.அப்துல் றஸாக் தலைமை தாங்கினார்.

# கௌரவிப்பும் பரிசளிப்பும்





■ அ. அச்சுதன்

திருகோணமலை நகராட்சி மன்ற பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு வைபவமும் கௌரவிப்பு நிகழ்வும் செவ்வாய்க்கிழமை (10) நகர சபை மண்டபத்தில் நகர சபையின் செயலாளர் வெ. இராஜசேகர் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வின் பிரதம விருந்தினராக திருகோணமலை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சூ. பார்த்திபனும் சிறப்பு விருந்தினர்களாக ஶ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் அதிபர் செ. பத்மசீலன், உப்புவெளி சுகாதார வைத்திய அதிகாரி



டொக்டர் ச. சையொளிபவன் ஆகியோரும் கௌரவ விருந்தினராக சமூக ஆர்வலர் க. சுப்பிரமணியமும் கலந்து சிறப்பித்தனர்.

ஶ்ரீ சக்தி கலாலயா மாணவியின் தமிழ் கலாசார நடனம் உட்பட பட்டிமன்றம், கவிஞர் அ. அச்சுதனின் கவிதை, இஸ்லாமிய கலாசார நடனம், சிங்கள கலாசார நடனம் என்பனவும் இடம்பெற்றன.

கிழக்கு மாகாண நீர்ப்பாசன

# பணிப்பாளராக யூ.எல்.ஏ.நஸார்

■ நூருள் ஹுதா உமர்

கிழக்கு மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளராக பொறியியலாளர் உதுமாலெவ்வை அஹமட் நஸார், மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகத்தில் தனது கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

கிழக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளராக கடமையாற்றிய இவர், நீர்ப்பாசனப் பொறியியலாளராக, பிரதி நீர்ப்பாசன பணிப்பாளராக கடந்த 25 வருடங்களுக்கு மேலாக சேவையாற்றி வரும் யூ.எல்.எ.நஸார், உலக வங்கியின் உதவியுடன்செயற்படுத்தப்பட்ட வடக்கு - கிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் சிரேஷ்ட பொறியியலாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

தற்போது உலக வங்கியின் உதவியுடன் பொத்துவில், லகுகல ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள சிறு குளங்கள் புனரமைப்புக்கும் பொறுப்பாக உள்ளதுடன் அக்குளங்களின் நீர்க்கொள்ளளவு அதிகரித்து, உற்பத்தியும் அதிகரித்தது.

கல்முனையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையின் பழைய மாணவர் என்பதுடன் பேராதனை பல்கலைக்கழகத்தில் எந்திரவியல் விஞ்ஞானமானிப் பட்டத்தை சிவில் துறையில் பெற்றதுடன் நிர்மாண முகாமைத்துவத்தில் பட்டப்பின் படிப்பினை மேற்கொண்டவராவார்.



# விக்டோறியஸ் விளையாட்டுக் கழக 40ஆவது ஆண்டு நிறைவு

■ பாறுக் ஷிஹான்

கல்முனை உவெஸ்லி பாடசாலையைத் தளமாக கொண்டு 1982இல் ஆரம்பிக்கப்பட்ட கல்முனை விக்டோறியஸ் விளையாட்டுக் கழகம், 40ஆவது ஆண்டு நிறைவு கொண்டாட்ட தொடர் நிகழ்வு நேற்று (12) கல்முனை நகர் ஐக்கிய சதுக்கத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

2023ஆம் ஆண்டு முழுவதும் கட்டம் கட்டமாக நடைபெற உத்தேசிக்கப்பட்டுள்ள இந்நிகழ்வுகளை சம்பிராதய பூர்வமாக ஆரம்பித்து வைக்கும் முகமாக, நேற்று டீ சேட்டுகள் காட்சிப்படுத்தப்பட்டு வெளியிட்டு வைக்கப்பட்டன.

இந்நிகழ்வைத் தொடர்ந்து ‘நோய் அற்ற வாழ்வே குறையற்ற செல்வம்’ எனும் தொனிப்பொருளை உயிர்பிக்கும் வகையில், சைக்கிள் மெல்லொட்ட நிகழ்வு நடைபெற்றது.

கல்முனை விக்டோறியஸ் விளையாட்டுக் கழகத்தின் ஸ்தாபகரும் தற்போதைய தவிசாளருமான ஏ.எம் றியாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை மாநகர மேயர் ஏ. எம். றகீப், கௌரவ அதிதியாக டொக்டர் ஜெமீல் முஹம்மட் றிஸான், விசேட அதிதியாக கல்முனை தலைமையக பொலிஸ் பரிசோதகர் எம். ரம்ஷீன் பக்கீர், பிரதான பொலிஸ் பரிசோதகர் ஏ. எல் ஏ வாஹிட் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# இந்திய முட்டைக்கு அஞ்சி வர்த்தகர்கள்

## முட்டை மாஃபியாவை ஒழிக்கலாம் என்கின்றனர் நுகர்வோர்

சுதத் எச்.எம்.ஹேவா



கோழி முட்டைகளை இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதை அடுத்து, ஹட்டன் நகர முட்டை வர்த்தகர்கள், முட்டையின் விலையை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கடந்த நாள்களில் 65 ரூபாய் முதல் 70 ரூபாய் வரையிலும் விற்பனை செய்யப்பட்ட முட்டையொன்று, 12 நாள்கள் கடந்த நிலையில், 57 ரூபாய் அல்லது 58 ரூபாய்க்கு குறைத்து விற்பனை செய்யப்பட்டன.

முட்டைகளின் மொத்தவிலை ஓரளவுக்கு குறைந்துள்ளமையால், சில்லறை விலையில் குறைத்துள்ளோம் என்று முட்டை வர்த்தகர்கள் சிலர் தெரிவித்தனர்.

வர்த்தக மாஃபியா மூலமாக முட்டை விலையை அதிகரித்து நுகர்வோருக்கு சங்கடங்களை ஏற்படுத்திய வர்த்தகர்கள், பெருந்தொகையில் கொள்ளையடித்துக்கொண்டனர் என்றும் நுகர்வோர் தெரிவித்தனர்.

எனினும், கோழி முட்டையை இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதை அடுத்து, முட்டையின் விலையை வர்த்தகர்கள் குறைத்துள்ளனர் எனத் தெரிவித்த நுகர்வோர், இந்தியாவில் இருந்து அல்ல, வேறெந்த நாடுகளில் இருந்தாவது முட்டைகளை ஆகக் கூடுதலாக இறக்குமதிச் செய்து, குறைந்த விலையில் விற்பனை செய்வதன் ஊடாகவே முட்டை மாஃபியாவுக்கு முற்றுப்புள்ளி வைக்கமுடியும் என்றனர்.

# கட்டுப்பணம் கட்டியது மொட்டு

பாலித ஆரியவங்ச



தாமரை மொட்டை சின்னமாகக் கொண்டுள்ள ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, பதுளை மாவட்டத்தில் சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் கட்டுப்பணம் செலுத்தியது.

பெரமுனவின் பொதுச் செயலாளரான பாராளுமன்ற உறுப்பினர் சாகல காரியவசம் தலைமையில் கட்டுப்பணம் வியாழக்கிழமை (12) செலுத்தப்பட்டது.

# காடுகளுக்கு விஷமிகள் தீ வைப்பு

செதி.பெருமாள்



மத்திய மலைநாட்டில் கடந்த சில நாள்களாக கடுமையான வெப்பம் நிலவிவருவதுடன் அதிகாலை வேளையில் அதிகளவில் குளிரான வானிலையே நிலவுகின்றது. இக்காலத்தில் சமூக விரோதிகள் பற்றைகளுக்கு தீ வைக்க ஆரம்பித்து விட்டனர்.

மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள கிராப்பு தோட்ட பகுதியில் உள்ள மவுஸ்சாகலை நீர்த்தேக்கத்தைச் சுற்றியுள்ள பற்றைகளுக்கு தீ வைத்து உள்ளனர். இதனால் சுமார் 10 ஏக்கர் காடுகள் கருகியுள்ளன.

வன ஜீவராசிகள் தீயில் அழிந்து போய் உள்ளன. குறிப்பாக குருவிகள், மான் குட்டிகள், முயல், பன்றி போன்ற பல உயிரினங்கள் அழிந்து போய் உள்ளன.

இது குறித்து வன பாதுகாப்பு அதிகாரிகள் கருத்து தெரிவிக்கையில், மாலை 6 மணிக்கு மேல் தீ வைப்பதால் தீயை அணைக்க முடியாத நிலையில் உள்ளதாகவும் காட்டு மிருகங்கள், பறவைகள் அழிவதுடன் தோட்ட குடியிருப்பு பகுதிக்குள்ளும் மிருகங்கள் நுழைய வாய்ப்பு உள்ளது என்றனர்.

வன பகுதிக்கு தீ வைப்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க உள்ளதாகவும் தீ வைப்பவர்களை அடையாளம் காண்பதற்கு, அப் பகுதியில் உள்ள அனைத்து மக்களும் உதவி செய்ய வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளார்.

# மைத்திரியும் நுரளையில் கட்டுப்பணம் செலுத்தினார்

ரஞ்சித் ராஜபக்ஷ



உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி, நுவரெலியா மாவட்டத்தில் 12 உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடுவதற்கான கட்டுப்பணத்தை செலுத்தியது.

இந்தக் கட்டுப்பணத்தை ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்ன, வியாழக்கிழமை (12) செலுத்தினார்.

ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி, நுவரெலியா மாநகர சபை, தலவாக்கலை-லிந்துல நகர சபை, ஹட்டன்-டிக்கோயா நகர சபை உள்ளிட்ட நுவரெலியா மாவட்டத்தில் உள்ள 9 பிரதேச சபைகளிலும் போட்டியிடவுள்ளது.



# பி.தஸநாயக்க பதவியேற்றார்

எஸ். கே. குமார்

நுவரெலியா மாவட்டத்திலுள்ள கொத்மலை பிரதேச செயலகத்தின் உதவி பிராந்திய செயலாளராக டி.எம்.டி.பி தஸநாயக்க, வியாழக்கிழமை (12) பதவியேற்றார்.

இலங்கை நிர்வாக சேவையில் மூன்றாம் தர அதிகாரியான இவர், இதற்கு முன்னர் வவுனியா மாவட்ட செயலகம், யட்டிநுவர பிரதேச செயலகம், விவசாய திணைக்களம் ஆகியவற்றில் முகாமைத்துவ சேவை அதிகாரியாக பணியாற்றியுள்ளார்.

அத்துடன், புத்த சாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் உதவி செயலாளராகவும் பதவி வகித்துள்ளார்.

பதவியேற்கும் நிகழ்வில் கொத்மலை பிரதேச செயலாளர் நதீரா லக்மால் மற்றும் அலுவலக அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# 3 எருமைகள் திருட்டு

சுமணசிறி குணதிலக்க

மொனராகலை, குடாஓயா பொலிஸ் பிரிவில் கந்தெயாய பிரதேசத்தில் மேய்ச்சலுக்கு விடப்பட்ட எருமை மாடுகள் மூன்று திருடக்கப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 11ஆம் திகதி, திருடிச்செல்லப்பட்ட அந்த மூன்று எருமை மாடுகளின் விலை, இரண்டு இலட்சமாகும்.

எருமை மாடுகள் மூன்றும் கட்டப்பட்டே மேய்ச்சலுக்கு விடப்பட்டன. அவ்விடத்தில் டயர்களின் அடையாளம் இருப்பதால், வாகனத்தின் ஊடாக அந்த மூன்று எருமைகளும் ஏற்றிச்செல்லப்பட்டிருக்கலாம் என்றும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

# இ.போ.ச பஸ்ஸை விட்டோடிய டயர்

என். ஆராச்சி



தெரணியகல- பொல்கஸ்வத்த வீதியில், பயணித்துக் கொண்டிருந்த இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்ஸின் பின் டயர் கழன்று ஓடிவிட்டது.

புதன்கிழமை (11) இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் பயணிகள் எவருக்கும் எவ்விதமான பாதிப்புகளும் ஏற்படவில்லை.

இந்த வீதியானது குன்றும் குழியுமாக இருக்கிறது. சப்ரகமுவ மாகாண சபையினால் பராமரிக்கப்படும் இவ்வீதி, பல வருடங்களாக செப்பனிடப்படாமல் இருந்துள்ளது.

மேடு, பள்ளங்கள் நிறைந்த இந்த வீதியில் வளைவான இடங்களில் இவ்வாறான அனர்த்தம் ஏற்பட்டிருந்தால், உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டிருக்கும் என்றும் பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

# பூண்டுலோயாவில் கட்டாக்காலிகள் தொல்லை

நீலமேகம் பிரசாந்த்

கொத்மலை பிரதேச சபைக்கு உட்பட்ட பூண்டுலோயா நகரில் நாய்கள் அதிகரிப்பின் காரணமாக நகரத்துக்குச் செல்வோர் பாரிய அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

பூண்டுலோயா நகரை பிரதான நகரமாக கொண்டு ஏறத்தாழ 20 க்கும் மேற்பட்ட ஊர்களைச் சேர்ந்தவர்கள் நகரத்திற்கு வந்து செல்கின்றனர். இந்நிலையில் குப்பை கூழங்களில் இருந்தும் அதேபோல கடைகளால் அப்புறப்படுத்தப்பட்ட குப்பைகளையும் ஏனைய கழிவுகளையும் கௌவி வந்து வீதிகள் முழுவதும் ஆங்காங்கே சிதறவிடுவதால் நகர் முழுவதும் அசுத்தமாகிய சூழல் காணப்படுவதோடு துர்நாற்றம் வீசுவதாகவும் பொதுமக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

நகரத்தை பொறுத்தவரையில் 50க்கும் மேற்பட்ட கட்டாக்காலி நாய்கள் வீதியின் இருமருங்கிலும் மலம் கழித்து விடுவதால் நடப்பதற்கே அச்சப்படுகின்றனர்.

இரவு நேரங்களில் பஸ் தரிப்பிடத்திற்கு செல்லும் நாய்கள் ஒன்றாக சேர்ந்து மக்களை துரத்துவதும்,கடிப்பதுமாக இருப்பதால் இரவில் பஸ்களுக்குச் செல்ல மக்கள் பயப்படவேண்டியுள்ளது.

எனவே, கொத்மலை பிரதேச சபை இதற்கான உரிய தீர்வை வழங்க வேண்டுமென பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# சுயேட்சைக்குழு கட்டுப்பணம் செலுத்தியது

எஸ்.கணேசன்



உள்ளூராட்சிமன்ற தேர்தலில் கொட்டகலை பிரதேச சபைக்கு போட்டியிடுவதற்காக சுயேட்சைக்குழுவொன்று கட்டுப்பணம் செலுத்தியது.

சமூக செயற்பாட்டாளரும், அரசியல் ஆய்வாளருமான ராமன் செந்தூரன் தலைமையிலான குழுவினரே இவ்வாறு வியாழக்கிழமை (12) கட்டுப்பணம் செலுத்தினர்.

நுவரெலியா மாவட்டத்தில் உள்ள ஏனைய சபைகளிலும் தமது அணி சுயேச்சையாக களமிறங்கும் எனவும், அதற்கான கட்டுப்பணம் ஒரிரு நாள்களுக்குள் செலுத்தப்படும் எனவும் ராமன் செந்தூரன் கூறினார்.

“மலையக அரசியல் வாதிகள், எமது மக்களை திட்டமிட்ட அடிப்படையில் ஏமாற்றிவருகின்றனர். இளைஞர்களையும் சந்தர்ப்பத்துக்காக பயன்படுத்திவருகின்றனர். எனவே, இந்நிலைமை மாற வேண்டும். நாம் மாற்றியமைப்போம். சமூக மாற்றத்துக்கான பயணத்தை வெற்றிகரமாக ஆரம்பிக்கவே நாம் தேர்தலில் போட்டியிடுகின்றோம். மக்கள் எமக்கு ஆசிவழங்குவார்கள்” எனவும் செந்தூரன் நம்பிக்கை வெளியிட்டார்.

## நாவலப்பிட்டி, டிக்கோயா வைத்தியசாலைகளில்

# தாதியர்கள் ஆர்ப்பாட்டம்

ரஞ்சன் ராஜபக்ஷ





டிக்கோயா-கிளங்கன், நாவலப்பிட்டி ஆகிய வைத்தியசாலைகளில் கடமையாற்றும் தாதியர்கள், வியாழக்கிழமை (12) எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அந்த ஆர்ப்பாட்டத்துக்கு நோயாளர்களும் தங்களுடைய ஆதரவை நல்கியுள்ளனர்.

ஒரு மணிநேர பகலுணவு நேரத்திலேயே தாதியர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

“வங்கிக் கடன் வட்டி சதவீதத்தை குறை”, “சம்பாதிக்கும் போது அறவிப்படும் வரியிலிருந்து சுகாதாரதுறையை நீக்கு”,“மின்சாரக் கட்டணத்தை குறை”, “தாதியர் பதவி உயர்வு முரண்பாடுகளை களையவும்”, “நோயாளிகளுக்கு போதிய மருந்து வழங்கு”, “மருத்துவ உபகரணங்களை வழங்கு”, “உணவு மற்றும் பரிசோதனைகளை வழங்கவும்”, “பணிச்சுமையை குறைக்கவும்” என்றும் கோஷமிட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டங்களில் அகில இலங்கை தாதியர் சங்கத்தின் உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

# ஹட்டன் டிப்போவுக்கு புதிய பஸ் கிடைத்தது

ரஞ்சித் ராஜபக்ஷ

போக்குவரத்து அமைச்சின் ஊடாக ஹட்டன் டிப்போவுக்கு வழங்கப்பட்ட புதிய பஸ்கள், புதன்கிழமை (11) மாலை முதல் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டன.

புதிய பஸ்களின் பயணத்தை அம்பகமுவ பிரதேச சபையின் தலைவர் ஜயசிங்க பண்டார, ஹட்டன் பஸ் தரிப்பிடத்தில் இருந்து ஆரம்பித்து வைத்தார்.

அந்த பஸ்ஸை, கினிகத்ஹேன, கொத்தலஹேன, ஹகராபிட்டிய பிரதேசத்தில் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டது என ஹட்டன் டிப்போவின் முகாமையாளர் தெரிவித்தார்.

85 இலட்சம் ரூபாய் பெறுமதியான அந்த பஸ் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு, அதிலிருந்து கிடைக்கும் வருமானம் ஐந்து வருடங்களுக்குள், ஹட்டன் டிப்போவின் ஊடாக, கடன் வசதிகளை வழங்கிய நிறுவனத்துக்கு வழங்கவேண்டும் என்றும் முகாமையாளர் தெரிவித்தார்.



# ராஜபக்‌ஷர்கள் மீதான கனடாவின் அதிரடி தடை சாதகமானதா?

இலங்கையில் தேர்தல் ஒன்று நெருங்கும் காலப்பகுதியில், வாக்காளர்களின் கவனத்தை திசை திருப்பும் வகையில் செயற்பாடுகள் இடம்பெறுவதை கடந்த தேர்தல் காலப்பகுதிகளில் அவதானிக்க முடிந்தது.

தேர்தல் பிரசார மேடைகளுக்கு மக்களை அழைத்துச் செல்வதற்கு மதுப்போத்தல், உணவுப் பொதி, ஊக்குவிப்புக் கொடுப்பனவு, நன்கொடை என்பன வழங்கப்படுவது போன்றதே, வாக்காளரின் கவனத்தை திசைதிருப்பும் இந்தச் செயற்பாடுகளும் காணப்படுகின்றன.

ஆனாலும், பெரும்பான்மையினருக்கு ஆபத்து ஏற்படப் போவதாகக் தெரிவித்து, அல்லது பௌத்த மதத்துக்கு ஆபத்து ஏற்படப் போவதாகத் தெரிவித்து, இவ்வாறான காய் நகர்த்தல்கள், வியூகங்கள் 2010, 2019 ஆம் ஆண்டு தேர்தல் காலப்பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

குறிப்பாக, சிறுபான்மையினரை தாக்கியும் நசுக்கியும் விட்டு, அவர்களால் பெரும்பான்மையினருக்கு அச்சுறுத்தல் எழுந்துவிட்டது; நாட்டைப் பாதுகாக்கவும் சிங்கள தேசியத்தைப் பாதுகாக்கவும் நாம் ஆட்சிபீடம் ஏற வேண்டும்; எம்மால் மட்டுமே இந்த நாட்டைப் பாதுகாக்க முடியும் போன்ற கோஷங்களும், கருத்துகளும் பரவலாக பகரப்பட்டிருந்தன.

தற்போதும் தேர்தல் ஒன்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், இவ்வாறான சில நாடகங்கள் அரங்கேற்றப்பட ஆரம்பித்துள்ளன. அதில் ஒன்றாக, இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிகளான கோட்டாபய ராஜபக்‌ஷ, மஹிந்த ராஜபக்‌ஷ ஆகியோருக்கு எதிராக, கனடா அறிவித்துள்ள தடைகள் அமைந்துள்ளனவா எனும் சந்தேகமும் எழுந்துள்ளது.

நேரடியாக, கனடா அவ்வாறான எதிர்பார்ப்பைக் கொண்டிருக்காவிடினும், உண்மையில் போர்க்குற்றங்கள் காரணமாக இந்தத் தீர்மானத்தை கனடா மேற்கொண்டிருந்தாலும், இலங்கையில் நடைபெறவுள்ள தேர்தலில் பெரும்பான்மையினரின் வாக்குகளைக் கவர்வதற்கு இந்தத் தீர்மானம் செல்வாக்குச் செலுத்தும் ஒரு காரணியாக அமைந்துவிடலாம்.

ஏனெனில், சிங்கள பெரும்பான்மையினரின் பெரும்பாலானவர்களுக்கும், ராஜபக்‌ஷ ஆதரவாளர்களுக்கும், நாட்டைக் காத்த போர் வீரர்களாகவே ராஜபக்‌ஷர்கள் திகழ்கின்றனர். இந்நிலையில், கனடாவில் அதிகளவு புலம்பெயர் தமிழர்கள் வசிப்பதாகவும், இந்தத் தடை உத்தரவில் தமிழர்களின் பங்கு முக்கியமானதாக அமைந்திருப்பதாகவும் தெரிவித்து, விடுதலைப் புலிகள் இயக்கம் மீண்டும் தலைதூக்க, இந்தத் தடை உத்தரவு காரணமாக அமைந்துள்ளது; எனவே இந்த நாட்டைக் காப்பாற்ற ராஜபக்‌ஷர்களால் மட்டுமே முடியும்; அவர்கள் பதவிக்கு வரவேண்டும் எனும் கோஷம், தேர்தல் களத்தில் கண்டிப்பாக சூடுபிடிக்கப் போகின்றது.

கனடாவின் தீர்மானத்தை கண்டித்து, இலங்கையிலுள்ள கனடிய இராஜதந்திரியை, வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி அழைத்து, தமது அதிருப்தியை வெளியிட்டிருந்ததாக செய்திகள் வெளியாகியிருந்த நிலையில், இதுவும் பேரினவாத ஆதரவாளர்களை தூண்டும் செயற்பாடாக பார்க்கப்படுகின்றது.

நாடு பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ள நிலையில், பொது மக்கள் பெரும் இன்னல்களுக்கு அனுபவிக்கையில், தேர்தல் இடம்பெறுமாயின், கடந்த தேர்தல்களில் வெற்றி வாகைசூடிய மொட்டு, இம்முறை வாடிவிடும் என்ற அச்சத்தில், தேர்தல் இடம்பெறுவதை தடுக்கும் முயற்சிகளை மேற்கொண்டு, எதுவும் கைகொடுக்காத நிலையில், இவ்வாறு தமக்கு எதிராக எழும் தீர்மானங்களையும், தமக்கு சாதகமாக்கிக் கொள்ளும் சாமர்த்தியம் ராஜபக்‌ஷர்களுக்கு உண்டு. மக்கள் தீர்மானிக்கட்டும்!

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

நடப்பவை எல்லாம் நல்லதுக்கே என எண்ணுங்கள். இதனால் வரப்போகும் நன்மைகளைப் பின்னர் உணர்வீர்கள்.

சில விடயங்கள் இதயத்தைப் புண்படுத்தும். இதனால், தொடர்ந்தும் அதைப்பற்றி யோசிக்காமல் விட்டால், துன்பங்கள் கரைந்துவிடும்.

தவறுகளைச் செய்தவர்கள், அனுபவ ரீதியில்த்தான், தாம் செய்தது தவறு என உணருகிறார்கள். சில சமயங்களில் தேவையற்றும் மனம் குமைவதுண்டு. சின்ன விடயங்களை , இழப்புகளை நினைத்து கவலைப்பட்டவர்களுக்கு, இயற்கையாகவே நல்ல காரியங்கள் வந்து சேர்வதுண்டு. இயற்கையின் மாற்றம் எப்படி நிகழ்கின்றது என்பது எமக்குப் புரிவதேயில்லை.

உலகம் தொடர்ந்தும் அல்லற்படுவதேயில்லை. பல நாடுகள் தங்களுக்கான சுதந்திரத்தை கஸ்டப்பட்டே அடைந்தன.

எல்லாமே முடிந்துவிட்டன என விரக்தியடைய முடியாது. தப்பான ஆட்சிகள்தான் கரைந்துபோகும். உணர்க! நீதியுள்ளவனே பலசாலி. பொய்யர்களின் எண்ணங்கள், கானல் நீர் போலானது.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## வலதுசாரி தீவிரவாதத்தின் நிழலில் – 10:

# சூழலியல் பாசிசம்: பசுமைப் பயங்கரவாதிகள்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

சமீபத்திய ஆண்டுகளில், பல தனிநபர் பயங்கரவாதிகள், வன்முறைக்கான அவர்களின் உந்துதலின் ஒரு பகுதியாக, சுற்றுச்சூழல் பாசிசத்தை மேற்கோள் காட்டியுள்ளனர். இத்தகைய சூழல்பாசிஸ்டுகள், இயற்கையைப் பற்றிய கற்பனையான கருத்துகளைக் கொண்டுள்ளனர். மேலும், அதனுடன் ஒரு புனிதமானதும் பிரத்தியேகமானமான பிணைப்பைக் கோருகின்றனர், அவர்கள் சக குடிமக்களுக்கு எதிரான தீங்குகளை நியாயப்படுத்த, ஒரே நேரத்தில் ஆயுதம் ஏந்துகின்றனர்.

சுற்றுச்சூழல் பிரச்சினைகள் பெரும்பாலும் அரசியல் இடதுசாரிகளால் பிரத்தியேகமாக ஆதரிக்கப்படுகின்றன. உதாரணமாக, மார்ச் 2019இல் கிறிஸ்ட் தேவாலயத்தில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலுக்கு ஒரு சுய-உறுதியான சுற்றுச்சூழல் பாசிஸ்ட், சில அரசியல் பண்டிதர்களால் 'இடதுசாரி' என்று முத்திரை குத்தப்பட்டார்.

சுற்றுச்சூழல் பிரச்சினைகளில் வலதுசாரிக் கூறுகளால் அணிதிரட்டப்படுவது, அரசியல் ரீதியாகவோ அல்லது கருத்தியல் ரீதியாகவோ முரண்பாடாக இல்லாவிட்டாலும், ஓர் ஒழுங்கின்மையாகவே பார்க்கப்படுகிறது. இது 'வெள்ளை மேலாதிக்கத்தை பச்சையாக கழுவுதல்' (green washing of white supremacy) என்று விவரிக்கப்படுகிறது. இருப்பினும், சுற்றுச்சூழல் பிரச்சினைகள், அரசியல் இடதுசாரிகளின் ஏகபோக உரிமை என்ற இந்தக் கருத்து, சுற்றுச்சூழல் உந்துதல்களைக் கூறி, வலதுசாரி பயங்கரவாதிகளால் சவாலுக்குட்பட்டுள்ளது.

தீவிர வன்முறைச் செயல்களுக்கு அதன் தொடர்பால், சுற்றுச்சூழலை எப்படி தீவிரவலதுசாரி சித்தாந்தங்களுக்கு காரணியாக மாற்ற முடியும் என்பதைப் புரிந்துகொள்வது அவசியம்.

பல போராட்டங்கள், பேரணிகள், கீழ்ப்படியாமை செயல்கள் மூலம், காலநிலை நெருக்கடியை உணர்ந்து அரசாங்கங்கள் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கோரின; அதற்காக மக்களை அணிதிரட்ட முயன்றன. பேரழிவு தரும் காட்டுத்தீ, கடுமையான வறட்சி, வெள்ளம், அதிகரித்து வரும் உலக வெப்பநிலை ஆகியவற்றால் ஏற்படும் தாக்கத்தை, உலகெங்கிலும் வாழும் மக்கள் உணரத் தொடங்குவதால், காலநிலை நெருக்கடி ஒரு முக்கியமான பிரச்சினையாக மாறியுள்ளது.

காலநிலை நெருக்கடியுடன் தொடர்புடைய பல சுற்றுச்சூழல் ஆர்வலர் குழுக்கள், தங்களை அரசியல் ரீதியாக கட்சி சார்பற்றவையாக கருதுகின்றன. மேலும் அரசியல் இடதுசாரி - வலதுசாரிகளுடன் தொடர்பை நிராகரிக்கின்றன. மாறாக, அவர்கள் அரசியல் கூட்டமைப்பைப் பொருட்படுத்தாமல் அனைத்து மக்களுக்கும் ஓர் அடிப்படைப் பிரச்சினையாக காலநிலை நடவடிக்கையை ஆதரிக்கின்றனர்.

இத்தகைய அமைப்புகளுக்கு, சுற்றுச்சூழல் கவலைகள் மீதான ஏகபோகம் இல்லை. முக்கிய நீரோட்டத்துக்கு அப்பால், வன்முறை அமைப்புகளும், சுற்றுச்சூழலில் ஆர்வமுள்ள தனிநபர்களும் உள்ளனர். இவற்றில் சில தீவிர வலதுசாரிகளில் இருந்து வெளிவருகின்றன.

தீவிர வலதுசாரிகளுக்குள், சுற்றுச்சூழல் என்பது ஒரு சர்ச்சைக்குரிய பிரச்சினை. சிலர் காலநிலை சந்தேகம் கொண்டவர்கள்; அதேசமயம் மிகக் குறைந்த எண்ணிக்கையிலானவர்கள் சுற்றுச்சூழல் பாசிஸ்டுகளாக அடையாளம் காணப்படுகிறார்கள். இந்த அமைப்புகளும் தனிநபர்களும் சுற்றுச்சூழலின் நிலையில் ஆர்வத்தை வெளிப்படுத்துகிறார்கள், பாசிச உலகக் கண்ணோட்டங்களுடன் பசுமைப் பிரச்சினைகளை ஒன்றிணைக்கின்றனர். இவர்களில் ஒரு சிலர் சூழலியல் உந்துதல்களைக் கூறி, வன்முறையில் ஈடுபட்டுள்ளனர். இதற்கு மூன்று அண்மைய உதாரணங்களைக் காட்டவியலும்.

2019இல் நியூசிலாந்தின் கிறிஸ்ட் தேவாலயத்தில் படுகொலைகளை நிகழ்த்திய வலதுசாரி பயங்கரவாதி பிரெண்டன் டாரன்ட், ஒரு சுற்றுச்சூழல் பாசிஸ்ட் ஆவார். இந்நிகழ்வால் உந்தப்பட்ட வெளிப்படையான சுற்றுச்சூழல்வாதியாக அறிவித்துக் கொண்ட பேட்ரிக் குரூசியஸ், 2020இல் டெக்சாஸ் நகரில் துப்பாக்கிச்சூடு நிகழ்த்தினார். சமீபத்தில் நியூயோர்க்கில் ஜென்ட்ரான் பெய்டன் நடத்திய துப்பாக்கிச் சூடு, பசுமைப் பயங்கரவாதத்துக்கான இன்னொரு சான்று!

பெய்டன் அவரது அறிக்கையில், சுற்றுச்சூழலானது 'தொழில்மயமாக்கப்பட்ட, தூள்தூளாக்கப்பட்ட மற்றும் பண்டமாக்கப்பட்ட ஒன்றாக மாற்றப்பட்டுள்ளது என்று குறிப்பிடுகிறார். இந்நிகழ்வுகள் தெளிவாக, தீவிர வலதுசாரிகளுக்குள் ஒரு பச்சை நரம்பு உள்ளது என்பதைக் கோடுகாட்டுகிறது, மேலும் அது பாசிசம் தோன்றியதிலிருந்து உள்ளது என்ற உண்மையையும் சேர்த்துச் சொல்கிறது.

தீவிர வலதுசாரி நம்பிக்கைகளுக்கும் சுற்றுச்சூழலுக்கும் இடையே ஒரு முழுமையான பிரிப்பு இருந்ததில்லை. உதாரணமாக, நாஜி ஜெர்மனி மூன்றாம் ரைச் ஆட்சியின் போது, சுற்றுச்சூழலுக்கு உகந்த கொள்கைகளை நிறுவியது, இது 'ரீச் சூழல்பாதுகாப்புச் சட்டம்' என அழைக்கப்பட்டது.

அதேநேரத்தில், அதே மூன்றாம் ரைச் ஐரோப்பா முழுவதும் மற்றும் அதற்கு அப்பால் பரந்த நிலப்பரப்புகளை அழித்தது முரண்நகை. ஜேர்மனியர்களுக்கும் இயற்கைக்கும் இடையே ஒரு புனிதமான பிணைப்பு இருப்பதாக முக்கிய நாஜி தலைவர்கள் வாதிட்டனர், இது அவர்களது 'இரத்தமும் மண்ணும்' என்ற கருத்துருவாக்கத்துக்கு வழிவகுத்தது.

இத்தாலிய பாசிஸ்டுகள் தேசிய பூங்காக்களை உருவாக்கி, பெனிட்டோ முசோலினியின் கீழ், மீண்டும் காடு வளர்ப்பு நடைமுறைகளில் ஈடுபட்டனர். பூர்வீக மக்கள் இயற்கையை மேம்படுத்தி, இயற்கையால் மேம்படுத்தப்பட்டதால், மக்களுக்கும் இடத்துக்கும் இடையே புனிதமான பிணைப்பு இருப்பதாக அவர்களும் வாதிட்டனர்.

எனவே, சுற்றுச்சூழலில் பாசிச ஆர்வம் ஒரு புதிய நிகழ்வு அல்ல. 'சூழல்பாசிசம்' என்ற போர்வையின் கீழ், தீவிர வலதுசாரிகளிடையே மனித நேயத்துக்கும் இயற்கைக்கும் இடையேயான உறவு உருவான விதம் குறிப்பாக கவனிக்கத்தக்கது.

பாசிஸ்டுகள் பொதுவாக இயற்கையைப் பற்றிய மனிதனை மையமாகக் கொண்ட பார்வையைக் கொண்டுள்ளனர். இதில், இயற்கையும் அதன் வளங்களும் மாயமாக கற்பனை செய்யப்பட்ட சமூகத்தைத் தக்கவைக்க அவசியமானவை. மற்றவர்களை ஒதுக்கிவைத்து, கொடுக்கப்பட்ட இடத்தின் வளங்களுக்கு இந்தச் சமூகம், இயற்கையான சலுகையும் உரிமையும் கொண்டதாக உள்ளது. பாசிஸ்டுகள் உலகை எப்படிப் பார்க்கிறார்கள் என்பதை, இந்தச் சலுகை உணர்வு வியாபித்திருக்கிறது.

'வலுவானதே சரியானது' என்ற நம்பிக்கை மேலோங்கியுள்ள ஓர் அமைப்பில், உரிமை என்பது இயலுகின்றவர்களுக்கானது. அங்கு இயற்கையான போட்டி, பலவீனமானவர்களை வலிமையானவர்கள் இடமிருந்து பிரிக்கிறது. இன்று பெரும்பாலானோர் அறிந்திருக்கும் சூழல் அரசியலில் இருந்து இது வேறுபட்டது.

சூழலரசியல் பூமியை மையமாகக் கொண்ட பார்வையை ஊக்குவிக்கிறது, இதில் மனிதகுலம் ஒரு சிக்கலான உலகளாவிய சுற்றுச்சூழல் அமைப்பின் ஒரு பகுதியாகும். மற்ற உயிரினங்களை விட, மனிதன் பெரியவனோ அல்லது முக்கியமானவனோ அல்ல. ஆனால், இதற்கு மாறாக இயற்கையின் மீதான பாசிச அக்கறை இரண்டாம் பட்சமானது; மக்கள் மீதான அக்கறையே முதன்மையானது. ஆனால் அடிப்படையான சூழலியல் சிந்தனைகளில், சுற்றுச்சூழலுக்கே முதலிடம்; மக்கள் இரண்டாம் பட்சமே.

'சூழலியல் பாசிசம்' என்பது பாசிசம் மற்றும் அரசியல் சூழலியல் ஆகியவற்றின் இணைப்பு அல்ல! மாறாக, பாசிசத்தின் துணை வகையாகும். இதன் விளைவாக, சூழல்பாசிஸ்டுகள், பொதுவாக இயற்கையின் அல்லது பூமியின் சுற்றுச்சூழல் நல்வாழ்வில் அரிதாகவே அக்கறை கொண்டுள்ளனர், மாறாக, அவர்களின் 'இனம்' மற்றும் குறிப்பாக அவர்களின் நிலத்தில் கவனம் செலுத்துகிறார்கள்.

சூழலியல் பாசிசம் மிகவும் பிற்போக்குத்தனமானது. அதன் பிற்போக்கான தன்மை யாதெனில், சுற்றுச்சூழல் அழிவு, தொழில்மயமாக்கல், நகரமயமாக்கல், பொருள்முதல்வாதம் மற்றும் அதிக மக்கள்தொகை ஆகியவற்றைக் கொண்டு வந்த நவீனத்துவத்தின் ஊழல் சக்திகளை நிராகரிக்க அது சுற்றுச்சூழல் நெருக்கடிகளைப் பயன்படுத்துகிறது.

மேலும், குடியேற்றவாசிகள் சுற்றுச்சூழலின் மீது ஆக்கிரமிப்பு நிகழ்த்துவதாகவும் தீங்கு விளைவிக்கும் தாக்கங்களை ஏற்படுத்துவதாகவும் நிராகரிக்கப்படுகிறார்கள். எனவே சுற்றுச்சூழல் அழிவுக்கு மக்கள்தொகையின் ஒரு பகுதியே காரணம் என்று சுற்றுச்சூழல் பாசிஸ்டுகள் பெரும்பாலும் வாதிடுவர்.

நவீனத்துவமானது பாஸிட்டுகள் கட்டமைக்கின்ற கற்பனையான சமூகத்துக்கும் இயற்கைக்குமான தொடர்பை சீர்குலைத்துள்ளது என்பர். இதனால் ஒரு பலவீனமான, நலிந்த சமூகம் தோற்றம்பெற்றுள்ளது. இது அதிகப்படியான நுகர்வு, அதிக மக்கள்தொகை ஆகியவற்றால் இயற்கையை சேதப்படுத்துகிறது என்று சூழலியல் பாசிசம் கருதுகிறது.

சூழலியல் பாசிசம் பல்வேறு வடிவங்களில் உள்ளது. அதன் இயற்கை மீதான அக்கறையின் அளவுகோல் ஆளாளுக்கு வேறுபடுகிறது. ஆனாலும் பொதுவானது யாதெனில், பூவுலகின் ஆரோக்கியத்தை விட அவர்களின் குறிப்பிட்ட நிலத்தைப் பற்றிய அக்கறையே முக்கியமானது.

இயற்கையைப் பாதுகாக்கவும் நிர்வகிக்கவும் பூர்வீக மக்களால் மட்டுமே முடியும் என்று சில சுற்றுச்சூழல்வாதிகள் அடிக்கடி வாதிடுகின்றனர். இது இயற்கையின் பிரத்தியேக பாதுகாவலர்களாகவும் வரையறுக்கப்பட்ட இடத்தின் சுற்றுச்சூழல் தேவைகளாகவும் தங்களை நிலைநிறுத்திக் கொள்ளவும், மற்றவர்களின் தொடர்ச்சியான இருப்பை நீக்கவும், சுற்றுச்சூழல் பாசிஸ்டுகளை அனுமதிக்கிறது என்பதை நாம் மறக்கவியலாது.

இந்தப் பாசிஸ்டுகள் இருத்தலியல் அச்சுறுத்தல் பற்றிய கதைகளைப் பயன்படுத்தி, குடியேற்றவாசிகள், இடதுசாரிகள் ஆகியோர் மீது இயற்கையின் பேரால் வன்முறையை மேற்கொள்ள வழியமைக்கிறார்கள். சூழலியல் பாசிசம் கருத்தியல் எதிரிகளுக்கு எதிரான பயங்கரவாதம் உட்பட கொடிய வன்முறையை நியாயப்படுத்துகிறது.

## கடிதங்கள்

### பங்கஸ் நோய்த் தாக்கத்தால்

# கந்தளாயில் விவசாயம் பாதிப்பு

கந்தளாய் நீர்ப்பாசன பொறியியலாளர் பகுதிக்கு உட்பட்ட கந்தளாய், வான் எல, அக்கா கம, முள்ளிப்பொத்தானை, தம்பலகாமம், அயிலியடி போன்ற பகுதிகளில் பங்கஸ் நோய்த் தாக்கம் அதிகரித்து வருவதாக, விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர் .

இப்பகுதியில் 1,000க்கும் மேற்பட்ட ஏக்கரில் வேளாண்மை செய்கை மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், பங்கஸ் நோய்த்தாக்கம் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இரவு - பகலாக நல்ல விளைச்சலைப் பெறுவதற்காகப் பாடுபட்டும் பிரயோசனமற்று காணப்படுவதாகவும் விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்தகாலத்தில், பசளை வகைகள், பீடைநாசினிகள் என்பவற்றை அதிக விலை கொடுத்து வாங்கி, விவசாயத்தை ஆரம்பித்த பின்னர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டதாகவும், இம்முறை பங்கஸ் நோய்த் தாக்கத்தால் அதிகம் பாதிக்கப்பட்டு உள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

நகைகளை அடகு வைத்து கடன்வாங்கி கிருமி நாசினி பயன்படுத்தியும் எந்தவொரு முன்னேற்றமும் இல்லை எனவும் தமது விவசாயத்தின் நிலைமைகள் தொடர்பாக, விவசாய அமைச்சின் அதிகாரிகள், பிரதேச செயலக விவசாய உத்தியோகத்தர்கள் போன்ற பொறுப்புவாய்ந்த பதவிகளில் இருப்போர், களத்தில் இறங்கி பார்ப்பதில்லை எனவும் விவசாயிகள் குற்றம் சுமத்துகின்றனர்.

எனவே, பங்கஸ் நோய்தாக்கம் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுப்பதற்கு ஆலோசனை வழங்குமாறும் விவசாயிகள் கேட்டுக்கொள்கின்றார்கள்.

எப். முபாரக்

ஜப்பான் மற்றும் இலங்கை

# இராஜதந்திர உறவுகளின் 70 வருட பூர்த்தி

இலங்கை மற்றும் ஜப்பானிடையே இராஜதந்திர உறவுகள் ஆரம்பித்து 70 வருட பூர்த்தியைக் குறிக்கும் வகையில் அண்மையில், ஜப்பானிய தூதரகத்தால் விசேட வைபவமொன்று இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் மிசுகொஷியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்வில் இலங்கைப் பிரதமர் தினேஷ் குணவர்தன கலந்து கொண்டார்.

இரு நாடுகளுக்குமிடையிலான உயர் மட்ட இராஜதந்திரிகளின் விஜயங்கள், ஜப்பானிய அரசாங்கத்தால் வழங்கப்பட்ட மானிய உதவிகள், இலங்கையின் தனியார் துறையில் ஜப்பானிய தனியார் முதலீடுகள், இலங்கையில் அண்மையில் முன்னெடுக்கப்பட்ட ஜப்பானிய மொழிக் கல்வி மற்றும் ஜப்பானின் அரச மாளிகையை அலங்கரிக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டமை மற்றும் ஜப்பானிய வெளிவிவகார அமைச்சரின் வாழ்த்துகள் போன்ற பல விடயங்களை தூதுவர் மிசுகொஷி நினைவுகூர்ந்தார்.

ஜப்பானுக்கும் இலங்கைக்குமிடையேயான உறவுகள் வலுவடைவதில் பாரிய பங்களிப்பு வழங்கியிருந்த பல்வேறு சம்பவங்களைப் பற்றியும் அவர் கவனம் செலுத்தியிருந்தார். இவற்றில் ஜுலை மாதத்தில் டனபடா தினம், நட்புறவு நடை பவனி, செப்டெம்பர் மாத சான் பிரான்சிஸ்கோ சமாதான பேரவை மாநாடு, டிசெம்பர் மாதத்தில் பொன்-ஒடொரி கொண்டாட்டம் போன்றன அடங்கியிருந்தன. இரு நாடுகளுக்குமிடையே வெற்றிகரமாக 70 வருடங்கள் நட்புறவைப் பேணுவதில் பங்களிப்பு வழங்கியிருந்தமைக்காக இலங்கை அரசாங்கம், இலங்கையின் உத்தியோகபூர்வ பங்காளர்களான இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம், ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை, தேசிய இளைஞர் சேவைகள் சம்மேளனம், ஜப்பானுடன் தொடர்புடைய நிறுவனங்கள், ஸ்தாபனங்கள் மற்றும் அனைத்து தரப்பினருக்கும் நன்றி தெரிவித்தார்.




**70 வருட பூர்த்தியைக் குறிக்கும் வகையில், வெகுசன ஊடக அமைச்சு மற்றும் தபால் திணைக்களம் ஆகியன இணைந்து தபால்தலை வெளியிட்டிருந்தன. இந்த முத்திரை மற்றும் அஞ்சலுறை ஆகியவற்றை ஹசினி தினேஷிகா மற்றும் ரஷ்மி தெவ்மினி ஆகியோர் வடிவமைத்திருந்தனர்.**

இலங்கையின் பிரதமர் தினேஷ் குணவர்தன குறிப்பிடுகையில், இரு நாடுகளுக்குமிடையே ஆழமான நட்பு மற்றும் பந்தம் ஆகியன முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்திருப்பது பற்றியும், ஜப்பான் மற்றும் இலங்கை மக்களின் புரிந்துணர்வின் முக்கியத்துவம் பற்றியும் குறிப்பிட்டிருந்தார். ஜப்பானிய அரசாங்கத்தின் பங்களிப்புகள், ஜப்பானிய தனியார் துறையின் முதலீடுகள் மற்றும் இரு நாடுகளுக்குமிடையிலான அரச, கல்விசார், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பம், ஆய்வுக் கைகோர்ப்புகள், பாதுகாப்பு, கலாசாரம், சமயம், நட்புறவு தொடர்பான பல்வேறு கைகோர்ப்புகள் பற்றியும் குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிகழ்வில், 70 வருட பூர்த்தியைக் குறிக்கும் வகையில், வெகுசன ஊடக அமைச்சு மற்றும் தபால் திணைக்களம் ஆகியன இணைந்து தபால்தலை வெளியிட்டிருந்தன.

இந்த முத்திரை மற்றும் அஞ்சலுறை ஆகியவற்றை ஹசினி தினேஷிகா மற்றும் ரஷ்மி தெவ்மினி ஆகியோர் வடிவமைத்திருந்தார். தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் முன்னெடுக்கப்பட்ட போட்டியிலிருந்து இவர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

SLT–MOBITEL இன் வருடாந்த நிதி அறிக்கை

# 2021க்கு SAFA விருது




ஸ்ரீ லங்கா டெலிகொம் பிஎல்சியின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த நிதி அறிக்கைக்கு, தெற்காசிய கணக்காளர் சம்மேளனத்தின் (SAFA) விருதுகள் வழங்கும் நிகழ்வில், தங்க விருது வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தது. 2021ஆம் ஆண்டில் சிறந்த வெளிப்படுத்தல்களைக் கொண்ட வருடாந்த நிதி அறிக்கைகள், ஒன்றிணைக்கப்பட்ட அறிக்கையிடல் மற்றும் கூட்டாண்மை வெளிப்படுத்தல்களுக்கான SAARC வருடபூர்த்தி விருதுகள் போன்றவற்றுக்காக இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நேபாளத்தின், காத்மண்டு நகரில் இடம்பெற்ற இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வில், 'தொடர்பாடல் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை' என்பதில் தங்க விருதை ஸ்ரீ லங்கா டெலிகொம் பிஎல்சியின் வருடாந்த நிதி அறிக்கை பெற்றுக் கொண்டது. சர்வதேச வரி விதிப்பு மற்றும் டிஜிட்டல் நாணயம் 2022 என்பதன் அங்கமாக இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

**சர்வதேச வரி விதிப்பு மற்றும் டிஜிட்டல் நாணயம் 2022 என்பதன் அங்கமாக இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.**

சந்தைப்படுத்தல் சேவைகள் பொது முகாமையாளர் அநுருத்த சூரியாரச்சி, நிதியியல் கணக்கீடுகள் மற்றும் வரிக் கையாளல்கள் பொது முகாமையாளர் இந்திரஜித் பிரியந்த ஆகியோர் SLT-MOBITEL சார்பாக இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

'No Dream too Big'எனும் தொனிப்பொருளுக்கமைய SLT-MOBITEL இன் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த நிதி அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்ததுடன், தொழில்நுட்ப புரட்சியை ஊக்குவிப்பது தொடர்பில் நிறுவனத்தின் நோக்கத்தை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளதுடன், பொருளாதாரம் மற்றும் சமூகத்தின் டிஜிட்டல் மாற்றியமைப்புக்கு தூண்டுகோலாகவும் வழங்குவதாகவும் அமைந்துள்ளது.

SAFA விருதை வெற்றியீட்டி இருந்தமையானது, SLT-MOBITEL இன் 2021ஆம் ஆண்டுக்கான வருடாந்த நிதி அறிக்கை கடந்த ஆண்டு முழுவதிலும் பெற்றுக் கொண்ட கௌரவிப்புகளுக்கு மேலும் அர்த்தம் சேர்ப்பதாக அமைந்துள்ளது.

தூத்துக்குடி

தூத்துக்குடிக்கும் இலங்கைக்கும் இடையில்

# கப்பல் சேவை மார்ச்சில் ஆரம்பம்



தூத்துக்குடி- இலங்கைக்கு இடையே, பயணிகள் கப்பல் போக்குவரத்துச் சேவை, எதிர்வரும் மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட வாய்ப்புள்ளதாக தூத்துக்குடி துறைமுக ஆணையகத் தலைவர் தா.கி. ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், தூத்துக்குடி- கொழும்பு இடையே மீண்டும் பயணிகள் கப்பல் இயக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

கப்பல் நிறுவனத்தினர் கப்பலை இயக்க விருப்பம் தெரிவித்தால் அவர்களுக்கு ஒத்துழைப்பு கொடுப்போம். தற்போது 2 நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் இலங்கைக்கு கப்பலை இயக்க விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இதனால் வரும் மார்ச் மாதத்தில் இலங்கைக்கு பயணிகள் கப்பல் இயக்க வாய்ப்பு உள்ளது. தற்போது மீண்டும் கொழும்பு, கொச்சி, சென்னை ஆகிய இடங்களுக்கு தூத்துக்குடியில் இருந்து பயணிகள் கப்பலை இயக்குவதற்கான பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. தற்போது பயணிகள் கப்பல் வந்து இருப்பது ஓர் ஆரம்பம்தான். தொடர்ந்து பல கப்பல்கள் தூத்துக்குடிக்கு வர வாய்ப்புள்ளது என்றார்.



உத்தர பிரதேசம்

## அது வேண்டாம்

உத்தர பிரதேச மாநிலம், நொய்டாவில் இயங்கிவரும் 'மேரியன் பயோடெக்' என்ற நிறுவனத்தின் தயாரிப்பான 'டோக்-1 மேக்ஸ்' என்ற இருமல் மருந்தை எடுத்துக் கொண்டதால், உஸ்பெகிஸ்தானில் 18 குழந்தைகள் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு சுகாதார அமைச்சகம் அண்மையில் குற்றம் சாட்டியிருந்தது.

குறித்த மருந்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் எத்திலீன் கிளைக்கால் எனப்படும் இரசாயனம் இருப்பது கண்டறியப்பட்டதையடுத்தே இக்குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து, 'மேரியன் பயோடெக்' நிறுவனம் தயாரிக்கும் 'டோக்-1 மேக்ஸ்' மற்றும் 'அம்ப்ரோனால்' என்ற இரண்டு இருமல் மருந்துகளையும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஆய்வுக் குழுவினர் பரிசோதித்திருந்தனர்.

இதன்போது இரண்டு இருமல் மருந்துகளிலும் அளவுக்கு அதிகமான எத்திலீன் கிளைக்கால் இரசாயனம் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதால், இரண்டு மருந்துகளும் குழந்தைகள் பயன்படுத்துவதற்கு உகந்ததல்ல என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே, மேற்கு ஆபிரிக்க நாடான காம்பியாவில் 66 குழந்தைகள் உடல்நலக் குறைவால் ஒக்டோபரில் உயிரிழந்தனர்.

வில்லிவாக்கம்



## திகிலூட்டும் தொங்கு பாலம்

சென்னை மாநகராட்சியின் 'ஸ்மார்ட் சிட்டி' திட்டத்தின் கீழ் சுமார் 36.5 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட வில்லிவாக்கம் ஏரியானது பசுமை சுற்றுச்சூழல் பூங்காவாக உருவாக்கப்பட்டு வருகின்றது.

அதற்காக இந்திய மதிப்பில் 45 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் 8 கோடி ரூபாய் செலவில் ஏரியின் நடுவே 250 மீற்றர் நீளம், ஒரு மீற்றர் அகலத்தில் தொங்கு பாலமொன்று அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் இப்பாதையில் நடந்து செல்லும்போது திகில் அனுபவம் ஏற்படுவதற்காக அப்பாலத்தில் 100 மீற்றர் வரை கண்ணாடிப்பாதை அமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தனியார் நிறுவனத்தின் பங்களிப்புடன் படகு சவாரி, இராட்டினம், நீர் விளையாட்டுகள், சாகச விளையாட்டுகள் என தனியார் பொழுதுபோக்கு பூங்காவுக்கு நிகராக 'தீம் பார்க்'கும் அமையவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாது மெய்நிகர் திரையரங்குகள், உணவுக்கூடங்களும் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆந்திர மாநிலம்

## ரயில் மீது கல் வீச்சு



விசாகப்பட்டினத்தில், வரும் 19ஆம் திகதி பிரதமர் மோடி தொடங்கி வைக்க உள்ள 'வந்தே பாரத்' ரயில் மீது விஷமிகள் சிலர் கல்வீசியதில் ரயிலின் இரு கண்ணாடி ஜன்னல்கள் சேதம் அடைந்துள்ளது.

ரயிலின் பராமரிப்புப் பணிகள் முடிந்து சோதனை ஓட்டம் நடைபெற்ற போதே காஞ்சராபாலம் என்ற இடத்தில் வைத்து சிலர் கல்வீசியுள்ளனர். கண்காணிப்பு கெமராக்கள் மூலம் கல்வீசியவர்களை அடையாளம் காணும் முயற்சியில் ரயில்வே பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

உத்தரபிரதேசம்



## நாய் குரைத்ததால் பெண் உயிரிழப்பு; 5 பேர் காயம்

உத்தரபிரதேசத்தில், பைரியா பகுதியில் அண்மையில் நாய் குரைத்ததால் இரு தரப்பினர் இடையே ஏற்பட்ட வாக்குவாதம் மோதலில் முடிந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இம்மோதலில் 50 வயதான பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார் எனவும், 5 பேர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இச்சம்பவம் தொடர்பில் இருவரைப் பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குமரி மாவட்டம்



## பொங்கல் சீர்வரிசை சோகத்தில் முடிந்தது

குமரி மாவட்டம், பூதப்பாண்டியைச் சேர்ந்தவர் பாலசுந்தரம்பிள்ளை. இவரது மகளான உமாவுக்கு அண்மையில் திருமணம் இடம்பெற்றுள்ளது. இந்நிலையில் உமாவுக்கு தலை பொங்கல் என்பதால், அவர் வசிக்கும் காக்கமூருக்குச் சென்று பொங்கல் சீர்வரிசையை வழங்கி வர அவரது குடும்பத்தினர் முடிவு செய்தனர்.

இதனைத் தொடர்ந்து பொங்கல் சீர்வரிசைகளோடு சொகுசு காரில் நேற்றுமுன்தினம் உமாவின் குடும்பத்தினர் 7 பேர் சென்றுள்ளனர்.

இந்நிலையில் அவர்கள் பயணித்த காரானது அழகியபாண்டியபுரம் அருகே வேகக் கட்டுப்பாட்டை இழந்து, 10 அடி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானது.

இதில் இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்த நிலையில், ஏனைய ஐவரும் படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# யாழின் அடையாளமான வேலிகள்



பா.கனகேஸ்வரி
(ஊடக கற்கைகள் துறை
யாழ்.பல்கழைக்கழகம்)

எனக்கு நன்றாக நினைவில் இருக்கிறது. மலையகத்தில், "வேலி" என்பது செடிகள், நீண்டு வளரும் புற்களால் மட்டுமே பெரும்பாலும் அமைக்கப்பட்டு இருக்கும். ஆனால், பாதுகாப்பு கருதி தற்காலிகமாக வேலிகள் பல வகை விதங்களில் அமைந்திருப்பதை பார்த்ததும், ரசித்ததும், வியந்ததும் யாழில் தான்.

உங்களில் எல்லோருக்கும் பெரும்பாலும் யாழ்ப்பாணம் என்றவுடன் முதலில் நினைவுக்குள் வருவது பனை மரங்களைத் தானே? அவை உயரமாக இருக்கும் என்பதுடன் சரி, மற்றைய விடயங்கள் பற்றி பெரும்பாலும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை தான்.

நானும் யாழ்ப்பாணம் வந்தபோது, பெரும்பாலும் பனை மரங்களையும் வயல் வெளிகளையும் தான் பார்த்தேன். வீட்டைச் சுற்றியும், அலுவலகங்கள், காரியாலயங்களைச் சுற்றியும், செங்கற்கள், சீமெந்து கற்கள், தகரங்கள், முட்கம்பிகளால் அடைக்கப்பட்ட வேலிகளை தான் பார்த்திருக்கும் நினைவும் அதிகம்.

ஆனால், யாழ்ப்பாணத்தின் நகர்ப்புறங்களை மட்டும் பார்த்தவர்கள் யாழின் "கிடுகு வேலி சமூகம்" என்ற பெயரை அறிந்திருக்க மாட்டார்கள். அந்த பெயரின் அர்த்தம் வேறானாலும், உண்மையில் யாழின் கிடுகு வேலிகளின் முக்கியத்துவம் இன்னும் குறையவே இல்லை.

நாகரீக வளர்ச்சி பழமையை போற்றும் யாழிலும் செல்வாக்கை செலுத்தியதால் செங்கற்களாலும், சீமெந்து கற்களாலும் வேலிகள் பெரும்பாண்மையாக காணப்பட்டாலும், யாழ்ப்பாணத்தின் அடையாளமாக கிடுகுவேலிகள் அமைந்திருக்கின்றன எனலாம்.

யாழ்ப்பாணத்தில் விவசாயத்தை தொழிலாகக் கொண்ட பெரும்பான்மையான குடும்பங்கள் காணப்படுகின்றன. அதனால் தான், இங்கு இயற்கை வளங்களோடு இணைந்த வாழ்க்கை முறையையும், தொழில்களையும் செய்து வாழ்கின்ற மக்கள் தம் நிலங்களை அடையாளப்படுத்தி காட்டுவதற்காக வேலிகளுக்கு முக்கியத்துவம் அளித்திருக்கிறார்கள். என்று எண்ண தோன்றுகிறது.

பெரும்பாலான வீட்டுச் சூழலிலும், விவசாய சூழலிலும் வேலிகள் அமைப்பது அத்தியாவசிய தேவைகளில் ஒன்றாக கருதப்படுகிறது. நான் ஆரம்பத்தில் பனைமட்டையால் பின்னப்பட்ட வேலிகளை தான் அதிகமாக கண்டேன். அவற்றில், வேறுபட்ட வடிவங்கள் உண்மையில் இப்போதும் கண் முன் தோன்றி மறைகின்றன.





பின்னர், பனை ஓலையால் மட்டுமல்ல இயற்கை பொருட்களைக் கொண்டு அமைக்கப்பட்ட பல்வேறுபட்ட வேலிகள் கண்களுக்கு தென்பட்டன. அவை காய்ந்த இலைகள், தென்னோலை கிடுகுகள், காய்ந்த குச்சிகள், ஒரு வகை முருங்கை கற்கள், வாழை சருகுகள், உயிர் மரங்கள் என பல்வேறுபட்ட பொருட்களைக் கொண்டு, வேலிகள் அடைக்கப்பட்டு இருந்ததை மிக ஆச்சரியமாக பார்த்துக் கொண்டிருக்க தோன்றியது.

என்ன உயிர் மரங்களா ? என்று நினைக்கிறீர்களா? ஆம்! பச்சை மரங்களால் அமைக்கப்பட்ட வேலிகளை தான், உயிர் மர வேலைகள் என்பர். இது "உயிர்வேலி" எனவும் அழைக்கப்படுகிறது. மழைக்காலங்களில் போடப்படும் வேலிகளாகும். இதற்காக பூவரசு, கிளுவை, முட் கிழுவை போன்ற மரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. மாரி காலத்தில் அம் மரங்களின் குழைகளை வெட்டி தோட்டங்களில் பசளையாக நிலத்துள் புதைப்பர். கிலுவை மரத்தில் நைதரசன் அதிகளவில் காணப்படுகிறது. இதனைத் தோட்டத்தில் புதைத்தலானது நைதரசன் பசளை போடுவதற்குச் சமமானது என நவீன விவசாய வனவியல் தத்துவங்கள் கூறுகின்றன.

இதிலும், ஒரு சிறப்பான அனுபவம் என்னவென்றால், பார்வையற்ற ஒருவர் கிடுகுகளை அழகாக எடுத்து ஒரு வீட்டின் முன் வேலிஅமைத்துக் கொண்டிருந்தார். அந்த வேலி மிக நேர்த்தியாக இருந்தது. நான் சென்று கேட்டபோது, வேலிகள் அமைப்பதை அவர் தொழிலாகவே செய்வதாகவும், அதன் மூலம் கிடைக்கும் பணம் தனக்கு வாழ்க்கை நடத்துவதற்கான வருமானத்தை தருவதாகவும் அவர் கூறியது, யாழ்ப்பாணத்தின் உறவுகளுக்கு வேலிகள் முக்கியமானது மட்டுமல்ல, அது ஒரு கலையாகவும் இருக்கும். அதேவேளை, வாழ்க்கைக்கான ஒரு கைத்தொழிலாகவும் அமைவதை அறிந்து கொள்ள முடிந்தது.

ஒவ்வொரு கிராமங்களிலும் வேலிகளை அமைப்பதற்கு வெவ்வேறு பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன. குறித்த கிராமத்தில் அதிகமாக கிடைக்கக்கூடிய பொருட்களை வைத்து அந்த கிராமத்தின் வேலிகள் பெரும்பாலும் ஒரே மாதிரியான பொருட்களைக் கொண்டு அமைக்கப்பட்டு இருக்கும். வேலிகளுக்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுப்பதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. வீடுகளில் சுற்றி அமைக்கப்படும் வேலிகள் வெளி ஊடுருவல்களில் இருந்து பாதுகாப்பு பெறவும், ஆடு, மாடு போன்றவை வீட்டின் முற்றத்திற்கு வருவதை தவிர்க்கவும், அந்நிய மனிதர்களின் உடல் ரீதியான ஊடுருவல்களை தடுப்பதுடன், பல சமயங்களில் வெளியில் இருந்து வீட்டினுள் நடக்கும் விடயங்களை அந்நிய மக்கள் பார்ப்பதை தடுக்கும் மறைப்புகளாகவும், வேலிகள் காணப்படுகின்றன.

யாழ் மக்களின் வாழ்வியலில் வேலிகள் பெறும் முக்கியத்துவம் பெரும்பான்மையாக இருப்பதினால் தான், ஊர்களின் பெயர்களில் கூட "வேலி" என்று சொல்லை சேர்த்து வைத்திருக்கிறார்கள் போல அச்சு வேலி, கட்டை வேலி, விளை வேலி, சங்கு வேலி, திருநெல்வேலி போன்ற ஊர்களும் ஊரின் கிழக்கு எல்லைகள் நீர்நிலை காணப்பட்டமையால், நீர்வேலி என்று பெயரும் ஊருக்கு அமையப்பெற்றதாகவும் அறிந்தேன்.

நெடுந்தீவு போன்ற தீவகப் பகுதிகளில் ஒருவகை முருகைக் கற்களை கொண்டு வேலிகள் அமைக்கப்பட்டு இருக்கும். இது ஒவ்வொரு பிரதேசத்தின் தனி சிறப்பாக அமைகிறது. வேலிகளைக் கொண்டே குறித்தபிரதேசத்தினை அடையாளம் கண்டு கொள்ளலாம் அந்த அளவுக்கு வேலிகள் யாழ் உறவுகளின் வாழ்வியலில் முக்கியத்துவம் பெற்றிருக்கின்றன.

வேலி என்ற சொல் உண்மையில் பண்டைய காலத்தில் நிலத்தை அளக்க பயன்படுத்தப்பட்ட ஒரு அளவை முறை தான். தஞ்சை மாவட்டத்தில் இப்போதும் வேலி என்று அளவை முறையால் நிலத்தை குறிப்பிடுகிறார்கள். ஒரு வேலி என்பது **6.17** ஏக்கர் பரப்பளவுக்கு சமன் என்று குறிப்பிடப்படுகிறது. ஆனால், இலங்கையில் வேலி என்று சொல் எல்லையை நிர்ணயிக்கப் பயன்படுகிறது. எல்லைக்கு பாதுகாப்பை தருகிறது. அதிலும், யாழில் வேலி என்பது மனித வாழ்க்கையின் முக்கியமான பகுதியாகவும் மாறி இருக்கிறது. வேலிக்கு என்று சட்டம் கூட காணப்படுகிறது. என்ன வேலைக்குச் சட்டமா? என்று யோசிக்கிறீர்களா? ஆம்! சட்டம் தான்.

யாழ்ப்பாண ராஜ்யத்தில் நெடுங்காலமாக நிலவி வந்த வழமைகளை அடிப்படையாகக் கொண்டு எழுந்தது தேச வழமை சட்டம். அது சட்டரீதியாக இன்றும் நடைமுறையில் உள்ளது. போர்த்துகேயர், ஒல்லாந்தர் ஆட்சி காலத்தில் அமைக்கப்பட்ட நீதிமன்றங்கள் தேசவழமை சட்டத்தின் அடிப்படையிலேயே வழக்குகளை விசாரித்து தீர்ப்புகளை வழங்கியது.

இந்த வழமையானது ஒல்லாந்தர் ஆட்சி காலத்தில், பதினெட்டாம் நூற்றாண்டு காலப்பகுதியில் சட்டமாக தொகுக்கப்பட்டது. இந்த சட்டம், இலங்கையில் வாழும் தமிழர்களுக்கான சட்ட நெறியாக இன்னும் நடைமுறையில் இருக்கிறது. இந்த சட்டத்தில் எல்லை வேலிகளுடன் தொடர்புடைய பல விடயங்கள் காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்து காணிகளில் எல்லை வேலிகளினை பாதுகாப்பதற்கான சட்ட ஏற்பாடுகள் இருப்பதாக வழக்கறிஞர் பொன். பூலோகசிங்கம் கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டு இருந்தார். அந்த அளவிற்கு வேலிகளுக்கு சட்ட முறைமையின் கீழ் முக்கியத்துவம் கொடுத்து பாதுகாக்கப்பட்டிருக்கிறது என்பது தெளிவாகிறது.

வேலிகள் மூலம் எத்தனையோ நினைவுகளை சுமந்த வேலிக்கதைகள் இன்றும் பலரின் இதயத்தில் இருக்கிறது. ஒரு பகுதியில் இருந்து அடுத்த பகுதிக்கு செல்ல முற்படும்போது, வேலிகளின் இடையில் நுழைந்து செல்வதற்காக இடைவெளிகள் ஆரம்ப காலத்தில் இருந்ததாகவும், அதனூடாக நுழைந்து உறவுக்காரர்களின் வீடுகளுக்கு சென்று வருவதையும் சிலர் குறிப்பிட்டனர். அந்த வேலி இடைவெளி "வேலிப்பொட்டு" என்று அழைக்கப்பட்டது.

வேலி பொட்டு ஊடாக புதினம் பேசுவதும், கதை பேசுவதும், காதல் வளர்ப்பதும் இன்றும் வாழ்வியலில் மறக்க முடியாத ஒரு பகுதியாக நினைவுகளில் இருக்கிறது. ஆனால், நாகரீகமும் கால மாற்றமும் இன்று இவை எல்லாவற்றையும் இல்லாமல் செய்திருக்கிறது என்பதும் உண்மைதான்.

இது மட்டுமல்ல, வேலிகளை தள்ளிப்போட்டு மெல்ல மெல்ல இடம் பெறும் நில ஆக்கிரமிப்பால் எழும் வேலிச்சண்டைகளும், குடும்ப சண்டைகளும், பொது சண்டையாகவும் மாறி இருக்கிறது எனவும் அறிய முடிந்தது.

இந்த வேலிகள் இயற்கை பொருட்களால் அமைக்கப்படுவதால் இயற்கை காரணிகளாலும், கரையான் போன்ற உயிரினங்களாலும், அரிக்கப்பட்டு புதிய வேலிகள் வருடத்திற்கு ஒருமுறை அமைக்கப்படுகின்றன. பலர் இந்த இயற்கை வேலிகளை விட்டு, சீமெந்து, முட்கம்பி, செங்கல், தகர வேலிகள் என்றும் அமைக்கிறார்கள். செயற்கை வேலிகள் கௌரவத்தின் சின்னமாக யாழில் பார்க்கப்படுவது இயற்கை வேலிகள் குறைவடைந்தமைக்கு ஒரு காரணம் எனலாம். எனினும், பசுமை வாழ்வியலின் ஓர் அங்கமாக இன்னமும் யாழில் வேலிகள் முக்கியத்துவம் பெறுவது யாழ்ப்பாணத்தின் தனித்த பழமையையும், அடையாளத்தையும், பறைசாற்றுவதுடன், யாழின் அடையாள சின்னமாகவும் வேலிகள் அமைகின்றன எனலாம்.

# மெல்லக் கொல்லும் குப்பை



கிசோபனா சுந்தரலிங்கம்
(ஊடகக்கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

இன்றைய காலகட்டத்தில் எம்மவர்கள் பெரிதும் சந்திக்கின்ற பிரச்சினைகளில், முன்னிலை வகிப்பது திண்மக் கழிவகற்றல். வளர்ச்சியடைந்து வருகின்ற எமது நாடு போன்ற நாடுகள் தொடங்கி, வல்லரசுகளாக உலகையே அச்சுறுத்தி வருகின்ற நாடுகளிலும் கூட திண்மக் கழிவகற்றல் என்பது இன்றும் தீர்வெட்ட முடியாத ஒன்றாகவே இருந்து வருகின்றது.

யாழ்ப்பாணத்தில் காணப்பட்ட 31 நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த 971 குடும்பங்களை மீளக்குடியமர்த்தும் செயற்பாட்டின் முதலாவது கட்டமாக 100 வீடுகள் கையளிக்கும் செயற்றிட்டமானது முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் வலிகாமம் வடக்குப் பகுதியில் நல்லிணக்கபுரம் என்கின்ற பெயரில் உருவாக்கப்பட்டு மக்களுக்கு கையளிக்கப்பட்டது.

இந்தப் பிரதேசமானது காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலைக்கு சொந்தமான பள்ளக்காணிக்கு (குவாரியில்) அருகிலே அமைக்கப்பட்டமையால், அந்தப் பகுதியில் வரையறையின்றி கொட்டப்பட்டு வருகின்ற குப்பைகளால், நல்லிணக்கபுர கிராம மக்கள் பெரும் சுகாதாரப்பிரச்சினையை எதிர்கொள்கின்றனர்.



குவாரியின் ஒருபுறம் கடற்படையினரும், மறுபுறம் வலிவடக்கு பிரதேச சபை, இராணுவத்தினரும் குப்பைகளை கொட்டிவருகின்றனர். வலிவடக்கு பிரதேச சபை,இராணுவத்தினரும் குப்பை கொட்டும் இடத்தில் இருந்து 100 மீற்றர் அருகில் மக்கள் குடியிருப்புகள் அமைந்துள்ளன. அதிலும் குப்பைக் கிடங்குகளுக்கு மிக நெருக்கமாக பத்திற்கு மேற்பட்ட குடும்பங்களின் வீடுகள் அமைந்துள்ளன. ஏனைய குடும்பங்களும் அந்த சுற்றாடலில் தான் குடியிருக்கின்றன.

இலங்கையின் வடபகுதியில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் பெரிய துறைமுகத்துடனும், இலங்கை சீமெந்துக்கூட்டுத்தாபனத்தின் மிகப்பெரிய தொழிற்சாலையும் அமைந்துள்ள மிக முக்கியமான நகரமான காங்கேசன்துறைக்கு அருகில் இந்தப் பிரச்சினை உருவெடுத்துள்ளது. திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்ட ஒன்றா என்கின்ற மாயையுடன் கூடிய சர்ச்சையையும் ஏற்படுத்தியுள்ளது.

குறித்த பகுதி நோக்கி எனது பயணம் ஆரம்பமாகியதுடன், அந்தப் பிரதேச மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை வெளிக் கொண்டுவருவதும் முக்கியமான நோக்கமாக இருந்தது. குப்பைகள் கொட்டப்படும் இடத்தை நெருங்க, தூரத்தில் ஒருவர் எரியூட்டப்பட்ட குப்பைகளை கிளறிக் கொண்டிருப்பதை அவதானித்து அவரை நோக்கிச் சென்று எனது கேள்விகளைக் கேட்க ஆரம்பிக்க அவர் சொன்ன பதில்கள் ஆச்சரியப்பட வைத்தன.

"நான் மாகியப்பிட்டியிலிருந்து வருகிறேன். இங்கு கிடைக்கின்ற போத்தல்களை கொண்டுபோய் விற்று ஒரு கிலோ கிராமுக்கு நான்கு ரூபாய் பெறுகின்றேன். இந்த இடம் இருப்பது எனக்குத்தெரியாது. இங்கு வழமையாக வந்து எடுக்கிறவர் சண்டிலிப்பாய் இருந்து வருகிறவர். அவர் ஐந்து ஆறு வருடமாக எடுக்கிறார். அவர் சொல்லியே நான் இங்கு ஐந்து நாளாக போத்தில்களை எடுக்கிறேன். இவற்றை எடுக்கவேண்டாம் என யாரும் தடுப்பதும் இல்லை. இங்கு கொண்டுவந்து கொட்டப்படுகின்ற குப்பைகள் எரிந்து முடிந்தாப்பிறகு இவற்றை எடுக்கின்றோம். இப்படி ஒருநாளைக்கே ஆறுபேர்கிட்ட இப்படி எடுக்கிறார்கள். ஒரு பதினொரு மணிக்கு ரக்டர்களில் குப்பைகளை கொண்டுவந்து கொட்டுவினம். ஒருநாளைக்கு மூன்று, நான்கு தடவைகள் கொண்டுவந்து கொட்டுவினம். நாங்கள் அதுகளைக் கிளறி எடுத்துக் கொண்டு போவம்" என்றார்.

இப் பிரச்சினைகள் தொடர்பாக அங்குள்ள மக்கள் சார்பில் யூட், என்பவருடன் கலந்துரையாடிய போது, இங்க நாங்க வந்து ஐந்து வருசமாகுது. நாங்க வந்ததிலிருந்தே குப்பைகளைக் கொண்டுவந்து போட்டு எரிக்கினம். இங்கு குப்பைகளை கொண்டுவரும்போது நாங்களும் தடுக்கிறம். அவங்களும் வந்துகொண்டு தான் இருக்கினம். நாங்கள் முக்கியமாக குற்றச்சாட்டு வைப்பது எண்டா பிரதேசசபை தான். இங்க எல்லா குடும்பத்தையும் பாத்தா ஒரு இருபது இருபத்தைந்து குழந்தைகள் இருக்கினம். இதனால் சிறு குழந்தைகளுக்கு அதிகமான பாதிப்புகள் ஏற்படுவதோடு எங்களுக்கும் பாதிப்பு ஏற்படுகிறது. குவாரிக்குள் இருக்கிற நாய்கள் இரவு நேரத்தில வெளியவரும். சிலவேளைகளில் உடுப்புகளை எடுக்காட்டி அவை கீழ விழும். இவற்றில் நாய்கள் படுக்கும். அங்க இருக்கிற கழிவுகளை இங்ககொண்டுவந்து போடுது. நிறைய பிரச்சினைகள் ஏற்படுகிறது. மலக்கழிவுகளை ஆமிக்காரன் கொண்டுவந்து கொட்டுராங்கள், கோழிப்பண்ணையில் இருந்து வரும் கழிவுகள், தலைமுடிகள் போன்றவற்றையும் கொண்டுவந்து கொட்டுகிறார்கள்.

மழை காலங்களில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகிறோம். இங்க எங்களை குடியமர்த்தும்போது இப்படி இடம்பெறுவது எங்களுக்கு தெரியாது. தெரிந்திருந்தால் நாங்கள் இந்தப் பகுதிக்கு வந்திருக்கமாட்டோம்.

இப்ப கிட்டடில கூட நல்லூர் பிரதேசசபை இங்க குப்பைகளை போடுவதற்கு வந்தது. நாங்கள் உடனே தவிசாளருக்கு போன் பண்ணி இங்க வரச்சொன்னோம். இங்க வந்த நான்கு ரக்ரர்களை திருப்பி அனுப்பினோம். அதுக்குப் பிறகு அது எங்க போனது என்டு தெரியாது. எங்களுக்குதெரியாமல் இரண்டு நாள்களாக ரக்ரர்கள் வந்திருக்கின்றது. எங்களுக்கு மூன்றாம் நாள் தான்தெரியும்.

சுவாசிக்கமுடியாது எரித்த குப்பைகளை மீண்டும் கிளறி இரும்புகள், போத்தில்களை எடுப்பதனால் அந்த மணம் மீண்டும் வரும். ஒரு நாளைக்கு மூன்று நான்கு பேர் வந்து இவற்றை எடுக்கிறதுக்கு வருகின்றனர். இப்படி இருப்பதே ஒரு மன உளைச்சலாகத்தான் இருக்கு. பிறகு பிறகு தான் இதனுடைய விளைவு தெரியும். இங்க வந்து பாத்திட்டு போறவங்கள் இப்படி ஓர் இடத்தில எப்படி இருக்கிறாங்க என்று சொல்லும் போது எங்களுக்கு மன உளைச்சல் ஏற்படுகிறது. இது தொடர்பாக பல இடத்தில கதைச்சும் எந்த பிரயோசனமும் இல்லை. அகிம்ஸையாலையும் பிரச்சினை செய்யலாம் வன்முறையாலையும் செய்யலாம்.வன்முறையால செய்தால் இந்தபப் பிரச்சினையே இருக்காது. இப்படி நாங்கள் எதுவும் செய்யயவில்லை. இது பிரதேச சபைக்குரிய இடம் என ஒதுக்கப்பட்டால் அதனை முன்கூட்டியே எங்களுக்கு தெரிவித்திருக்கவேணும்.

கொரியன் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தியிருந்தால் இந்தச் சுகாதாரம் சார்பிரச்சினைகள் ஏற்பட்டிருக்காது. அத்தோடு தொழில் வாய்ப்புகளும் கிடைச்சிருக்கும் என்று தங்களது நிலை தொடர்பில் சோகத்துடன் பதிலளித்தார்.

இந்தக் குப்பைக் கிடங்கினால் உருவாகுகின்ற பிரச்சினையானது வெறுமனே நல்லிணக்கபுரம் பகுதி மக்களை மட்டும் பாதிப்படைய வைக்கவில்லை, சூழவுள்ள கிராமங்களில் உள்ள மக்களும் பல சவால்களுக்கு முகங்கொடுத்து க்கொண்டிருக்கின்றனர். அயற்கிராம வாசிகள் சார்பிலே கீரிமலையைச் சேர்ந்த நாகராசா கருத்து தெரிவிக்கையில் - 1950ஆம் ஆண்டுகளில் சீமெந்து கூட்டுத்தாபனம் தொடங்கேக்க, இது காங்கேசன்துறை, மயிலிட்டி அந்த கிராமங்களில் எல்லாம் இருந்த மக்களுக்கு நட்டஈடு கொடுத்து அவ்வளவு மக்களையும் இடம்பெயரச்செய்து அந்தக் காணி அவ்வளவத்தையும் குவாரி கிடங்குகளாக மாற்றினார்கள். இதில் இருந்து தான் கல்லுகளை அகழ்ந்து சீமெந்து செய்தனர். 1950ஆம் ஆண்டிலிருந்து 1990ஆம் ஆண்டுவரை தொடர்ந்து சீமெந்து தொழிற்சாலை இயங்கியது. அப்ப அந்த கல்லை சீமெந்து செய்வதற்கு மட்டுமல்லாது அதன் பிறகு 1980ஆம் ஆண்டுக்குப்பிறகு காங்கேசன்துறை காபருக்கு இந்த கிடங்கில் இருந்து தான் கற்கள் எடுக்கப்பட்டு கடலுக்குள் கொட்டினர்.

இந்த கிடங்கில் இருந்து அதிகமான கல் (காங்கேசன்துறை காபருக்கு) கடலுக்கு கொட்டுவதற்கே எடுக்கப்பட்டது. துறைமுக அபிவிருத்திக்குத் தான், கல்லை அதிகமாக அகழ்ந்தெடுத்துக் கொண்டுபோய்கொட்டினர். அதன் பிறகு 1990ஆம் ஆண்டு சண்டைகளினால இடம்பெயரத்தொடங்கிட்டினம். அதோட அந்த கிடங்கு அப்படியே இருந்தது.அதற்குப் பிறகு விமானப்படை இந்தக் கிடங்கிற்க வந்து தங்களுக்கான விமானப்படை விஸ்தரிப்புக்காக கல்லுடைக்கும் தொழிற்சாலை, பலாலி விமான விஸ்தரிப்புக்காக ஆட்கள் இல்லாத காணிகளில் அகழ்வுகளை மேற்கொண்டு கற்களை எடுத்திச்சினம்.1950 இலிருந்து 2009ஆம் ஆண்டு வரை அந்தக் கிடங்குகளில் கற்கள் எடுபட்டுக்கொண்டே இருந்திருக்கிறது.

அதற்கு பிறகு பெரிய கிடங்காகவே இப்பவரைக்கும் இருக்கிறது. இதனை நிரப்புவது என்பது சரியான கஸ்டம். காங்கேசன்துறை காபருக்கு கிட்ட இருந்து கீரிமலை தொங்கல் வரை கற்குழியாகவேயுள்ளது. இதனை நிரப்புவதற்கு யாழ்குடாநாட்டில் அவ்வளவு மண்ணும் இல்லை. இப்பவும் பிரதேசசபை குப்பைகளை போட்டுக்கொண்டுதான் இருக்கிறது. 2014ஆம் ஆண்டு சீமெந்து கூட்டுத்தாபனம் யாழ்ப்பாணத்தில இயங்கிக்கொண்டுவந்தது. இப்ப கொழும்பில மட்டும் தான் இயங்கிக்கொண்டிருக்கிறது.

இங்கவுள்ள சீமெந்து தொழிற்சாலையில தொழில்கள் எதுவும் இடம்பெறுவதில்லை. படையினரது கட்டுப்பாட்டினுள்ளே இருக்கிறது. சீமெந்து கூட்டுத்தாபனத்தினுடைய காணிகள் தான் இவ்வளவும்.இதனை மூடும் போது அரசாங்கத்திடம் கையளித்துவிட்டினம். இப்ப இந்த இடத்தில மீள்குடியேற்றம் என்று அமர்த்தப்பட்டுள்ளது.

கொரிய நிறுவனம் ஒன்று வந்தது. தாங்கள் யாழ்குடா நாட்டில் சேருகின்ற இந்த குப்பைகளை அதாவது திண்மக்கழிவுகளை தரம் பிரித்து அதனை கொண்டு வந்து கிடங்கிற்குள் கொட்டுவதாகக் கூறினார்கள். அதற்கென வலையமைத்து அதனை அடையாளப்படுத்தியிருக்கிறார்கள். குப்பைகளை அப்படியே கொண்டுவந்து கொட்டுவதில்லை. அவற்றை தரம் பிரித்து உக்காத குப்பைகளை மட்டும்கொண்டுவந்து கொட்டி அவற்றை நிரப்புவதாக கூறினார்கள். இவர்கள்களது திட்டத்திற்கு மக்கள் சிலர் எதிர்ப்புத்தெரிவிக்கத் தொடங்கினர். இங்கு குப்பைகளைக்கொட்டுவதால் நிலத்தடி நீர் மாசுபடக்கூடும் . அதனால் பாரிய பிரச்சனைகள் ஏற்படக்கூடும். அதனால் கொரிய நிறுவனத்தினுடைய திட்டங்களை தடைசெய்யவேண்டும் என சிலபேர் பிரசாரங்கள் செய்தும் கூட்டங்கள் வைத்தும் பிரதேசசெயலகம் என அங்க இங்க என எல்லாம் அறிவித்து அப்ப அதனுடைய செயற்பாட்டினை நிறுத்தினார்கள். ஆனால் அதனை முற்றாக நிப்பாட்டினதோ இல்லையோ என எமக்குத் தெரியாது.

எவ்வாறாயினும், இந்தப் பிரச்சினை தொடர்பில் முடிவுகாணாது தொடர்ந்தும் குப்பைகளைக் கொட்டிவருவார்கள் என்றால் அந்தக் குப்பைக் கிடங்கினைச் சூழவுள்ள மக்கள் இனங்காணவே முடியாத பல நோய்களுக்கு உள்ளாக வாய்ப்புகள் உண்டு என்பதே நிதர்சனம்.



ஈ.எஃப்.எல் கிண்ணத் தொடர்:

# வெளியேற்றப்பட்ட மன்செஸ்டர் சிற்றி

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான இங்கிலாந்து கால்பந்தாட்ட லீக் கிண்ணத் தொடரிலிருந்து மன்செஸ்டர் சிற்றி வெளியேற்றப்பட்டுள்ளது.

விலகல் முறையிலான இத்தொடரில், செளதாம்டனின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான காலிறுதிப் போட்டியில் 0-2 என்ற கோல் கணக்கில் தோற்றே தொடரிலிருந்து சிற்றி வெளியேற்றப்பட்டுள்ளது.




## கல்முனை விக்டோறியஸ் விளையாட்டுக் கழக 40வது ஆண்டு நிறைவு

பாறுக் ஷிஹான்

கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையைத் தளமாகக் கொண்டு 1982ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட கல்முனை விக்டோறியஸ் விளையாட்டுக் கழகம், மலர்ந்திருக்கும் 2023ஆம் ஆண்டில் 40ஆவது ஆண்டு நிறைவு கொண்டாட்ட தொடர் நிகழ்வுகளை, கல்முனை நகர் ஐக்கிய சதுக்கத்தில் நேற்று ஆரம்பித்து வைத்தது.

இவ்வாண்டு முழுவதும் கட்டம் கட்டமாக நடைபெற உத்தேசிக்கப்பட்டுள்ள இவ் நிகழ்வுகளை சம்பிராதய பூர்வமாக ஆரம்பித்து வைக்கும் முகமாக கழகத்தின் 40ஆவது ஆண்டு நிறைவு கொண்டாட்ட இலச்சினை பதிக்கப்பட்ட டீ-ஷேர்ட்கள் காட்சிப்படுத்தப்பட்டு வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்நிகழ்வைத் தொடர்ந்து “நோய் அற்ற வாழ்வே குறையற்ற செல்வம்” எனும் தொனிப்பொருளை உயிர்பிக்கும் வகையில் வெளியிடப்படும் டீ-ஷேர்ட் அணிந்து கொண்டு சைக்கிள் மெல்லோட்ட நிகழ்வு நடைபெறவுள்ளது.



கோப்பா இத்தாலியா தொடர்:

## வெளியேற்றப்பட்ட ஏ.சி மிலன்

இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான கோப்பா இத்தாலியா தொடரிலிருந்து ஏ.சி மிலன் வெளியேற்றப்பட்டுள்ளது.

தமது மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற டொரினோவுடனான இறுதி 16 அணிகளுக்கான சுற்றுப் போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் தோற்றே தொடரிலிருந்து மிலன் வெளியேற்றப்பட்டுள்ளது.

ஸ்பானிய சுப்பர் கிண்ணத் தொடரின்

## இறுதிப் போட்டியில் றியல் மட்றிட்

ஸ்பானிய சுப்பர் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டிக்கு நடப்புச் சம்பியன்களான றியல் மட்றிட் தகுதி பெற்றுள்ளது.

சவுதி அரேபியாவில் இன்று அதிகாலை நடைபெற்ற கோப்பா டெல் ரே தொடரில் கடந்த பருவகாலத்தில் இரண்டாமிடம் பெற்ற வலென்சியாவுடனான அரையிறுதிப் போட்டியை பெனால்டியில் வென்றே நடப்பு லா லிகா சம்பியன்களான றியல் மட்றிட் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.



இரண்டாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில்

## பாகிஸ்தானை வீழ்த்திய நியூசிலாந்து

பாகிஸ்தானுக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில், கராச்சியில் நேற்று முன்தினம் நடைபெற்ற இரண்டாவது போட்டியில் நியூசிலாந்து வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: நியூசிலாந்து

நியூசிலாந்து: 261/10 (49.5 ஓவ. ) (துடுப்பாட்டம்: டெவோன் கொன்வே 101 (92), கேன் வில்லியம்ஸன் 85 (100), மிற்செல் சான்ட்னெர் 37 (40) ஓட்டங்கள். பந்துவீச்சு: மொஹமட் நவாஸ் 4/38, நசீம் ஷா 3/58, உஸாமா மிர் 1/42, ஹரிஸ் றாஃப் 1/47)

பாகிஸ்தான்: 182/10 (43 ஓவ. ) (துடுப்பாட்டம்: பாபர் அஸாம் 79 (114) ஓட்டங்கள். பந்துவீச்சு: இஷ் சோதி 2/38, டிம் செளதி 2/33, மிஷெல் பிறேஸ்வெ; 1/29, மிற்செல் சான்ட்னெர் 1/34, லொக்கி பெர்கியூசன் 1/31, கிளென் பிலிப்ஸ் 1/13)

போட்டியின் நாயகன்: டெவோன் கொன்வே

இரண்டு அணிகளுக்குமிடையிலான தீர்மானமிக்க மூன்றாவது போட்டியானது இன்று பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

ஆப்கானிஸ்தான்

# பெண்கள், சிறுமிகள் கல்வி கற்க நிரந்தரத் தடை?



ஆப்கானிஸ்தானில் கடந்த வருடம் தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றியதிலிருந்து அங்கு பல்வேறு கடுமையான கட்டுப்பாடுகளை விதித்து வருகின்றனர்.

குறிப்பாக பெண்களின் அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் விதமாக பல்வேறு கட்டுப்பாடுகளைத் தலிபான் அரசு விதித்து வருகின்றது.

அதிலும் குறிப்பாக பெண்கள் ஆண்களின் துணையின்றி வெளியே செல்வதற்கும், உடற்பயிற்சி நிலையங்கள் மற்றும் பூங்காவுக்குச் செல்வதற்கும், உயர் கல்வி கற்பதற்கும், விளம்பரங்களில் நடிப்பதற்கும், தொலைக்காட்சிகளில் தோன்றுவதற்கும் தலிப்பான் அரசு தடை விதித்துள்ளது.

அதுமட்டுமல்லாது கடந்தாண்டு டிசெம்பர் மாதம், மறு அறிவிப்பு வரும் வரை சிறுமிகள் 6ஆம் தரத்திற்கு மேல் படிக்கக் கூடாது எனவும் உத்தரவிட்டிருந்தமை உலகளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்து.

இதனையடுத்து உலக நாடுகள் பலவும் தலிபான்களுக்கு எதிராக தமது கண்டனங்களைத் தெரிவித்து வந்தநிலையில் “பெண்கள் மற்றும் சிறுமியர் கல்வி கற்க நிரந்தர தடை விதிக்கப்படவில்லை. பெண் கல்விக்கான சாதகமான சூழல் உருவாகும் வரை இத்தடை அமலில் இருக்கும்” எனவும் தலிபான்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கிரீஸ்

## கடைசி மன்னர் காலமானார்

கிரீஸ் நாட்டின் கடைசி மன்னரான 2ஆம் கான்ஸ்டென்னின் தனது 82ஆவது வயதில் உடல் நலக் குறைவு காரணமாக மரணமடைந்தார்.



கிரீஸின் மன்னாராக 1964 ஆம் ஆண்டு தனது 23ஆம் வயதில் அரியணை ஏறிய அவர், 1973 ஆம் ஆண்டு வரை மன்னராகப் பதவி வகித்தார்.

கிரீசில் மன்னாராட்சி முறைக்கு 1967ஆம் ஆண்டு எதிர்ப்பு எழுந்த நிலையில் கான்ஸ்டெனினின் நாட்டை விட்டு வெளியேறினார்.

பின்னர், 1974ம் ஆண்டு மன்னராட்சி முறை ஒழிக்கப்பட்டு மக்களாட்சி நடைமுறைக்கு வந்ததால் அவர் அதிகாரப்பூர்வமாக மன்னர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார்.

இதனையடுத்து மக்களாட்சி மலர்ந்த நிலையில் பின்னர் நாடு திரும்பினார். இதனிடையே, உடல்நலக்குறைவு காரணமாக ஏதேன்சில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த அவர் நேற்று முன்தினம் சிகிச்சை பலனின்றி மரணமடைந்தார்.

அமெரிக்கா




## 900 விமானங்கள் இரத்து

900 விமானங்கள் இரத்து செய்யப்பட்ட சம்பவம் அமெரிக்காவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவில், விமானிகள் மற்றும் விமான நிலைய அதிகாரிகளுக்குத் தகவல் அளிக்கும் நோடம் (NOTAM) முறை செயலிழந்துள்ளது.

இதன் காரணமாக சுமார் 5,400 விமானங்களைத் தாமதப்படுத்தவும், தரையிறக்கவும் உத்தரவிடப்பட்டது.

அதேசமயம் சுமார் 900 விமானங்கள் இரத்து செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் தற்போது மீண்டும் விமான சேவைகள் படிப்படியாகத் தொடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம் இச்சம்பவம் தொடர்பில் முறையான விசாரணையை முன்னெடுக்குமாறு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனும் உத்தரவிட்டுள்ளார்.

சிங்கப்பூர்

## விமானத்தில் பற்றியெரிந்த ‘பவர் பேங்க்’



தாய்வானிலிருந்து சிங்கப்பூருக்கு புறப்படத் தயாரான விமானத்தில், பயணி ஒருவருக்குச் சொந்தமான பவர் பேங்க்கொன்று திடீரென தீப்பற்றி எரிந்ததில் 2 பேர் காயமடைந்தனர்.

அதிக நேரம் பயன்படுத்தியதால் சூடான பவர் பேங்க் திடீரென தீப்பற்றி எரிந்ததாக கூறப்படுகிறது.

இதில், பவர் பேங்கின் உரிமையாளருக்கும், அவர் அருகே அமர்ந்திருந்தவருக்கும் விரல்களில் தீக்காயங்கள் ஏற்பட்டன. விமான நிலையத் தீயணைப்பு வீரர்கள் விரைந்து வந்து நெருப்பை அணைத்தனர். இதனால் விமானம் புறப்படுவது தாமதமானது.

அமெரிக்கா




## பொலிஸ் நிலையத்தில் 7 அதிகாரிகளோடு பெண் பொலிஸ் உல்லாசம்

அமெரிக்காவில், பொலிஸ் நிலையமொன்றில் 7 அதிகாரிகளோடு, பெண் பொலிஸ் அதிகாரியொருவர் உல்லாசமாக இருந்த வீடியோ இணையத்தில் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

டென்னசியில் உள்ள குறித்த பொலிஸ் நிலையத்தில், திருமணமான பெண் பொலிஸ் அதிகாரியொருவர், சக பொலிஸ் அதிகாரிகளோடு நெருக்கமாக பழகி வந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் உயர் அதிகாரிகளுக்குத் தெரிய வந்த நிலையில், இது குறித்து அவர்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு பலமுறை எச்சரித்தும், அவர்கள் இதனைப் பொருட்படுத்தவில்லை எனக் கூறப்படுகின்றது.

இந்நிலையில், இவர்கள் உல்லாசமாக இருக்கும் புகைப்படங்கள் அண்மையில் சமூக வலைத்தளங்களில் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அதேசமயம் இவ்விவகாரம் காரணமாக குறித்த பெண் பொலிஸ் அதிகாரியின் கணவர், அவருடன் உடலுறவு கொள்ள மறுத்துள்ளதாகவும், விவாகரத்து கோருவதாகவும் தகவல்கள் வெளியாகின.

பிரித்தானியா

## ஆம்புலன்ஸ் சாரதிகள் மாபெரும் வேலை நிறுத்தப் போராட்டத்தில்

பிரித்தானியாவில் ஊதிய உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஆம்புலன்ஸ் சாரதிகள் மாபெரும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் மோசமான நிலைமை உருவாகும் என சுகாதாரத்துறை அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

எனினும் மாரடைப்பு மற்றும் உயிருக்கு ஆபத்தான விபத்துகளில் சிக்கியவர்களுக்கு ஆம்புலன்ஸ் உதவி அளிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது குறித்து பாராளுமன்றத்தில் பேசிய பிரதமர் ரிஷி சுனக், அம்புலன்ஸ் சாரதிகளின் வேலைநிறுத்தத்தால் நோயாளிகளுக்கு பெரும்பாதிப்பு ஏற்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 13 ஜனவரி 2023, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.